SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

மெடலுக்கு விங்கி மந்திரி
—திப்பு (படத்துடன்)

கரும்பாயிரத்தின் கதை

புது வருஷப் பஞ்சாங்கம்
—படத்துடன்

புனர் ஜன்மம்
—பாரதி.

சிவாஜியின் வீரவாள்

மானங் கெடுக்கும் ஜீவன்

'டோபா' இல்லாத தலைவர்

புத்தகம் 4. சித்திரை மீ 1௳ (13-4-34) வெள்ளி இதழ் 20

ஆசிரியர் பேச்சு!

நண்பர்களிடையே அமர்ந்து 'பார்ஸலை' உடைத்து சம்புடத்தைத் திறக்கின்றார் ஒருவர். 'கம்' மென்று மணம் கமழ்கின்றது. அதே பார்ஸல் தபாற் காரியாலயத்திலும் ரயில் வண்டியிலும் கிடந்த பொழுது அது நறுமண வஸ்துவென யாருக்காவது தெரியுமா? துணியும் தகரமும் தான் மேலே தெரிந்துக் கொண்டிருந்தன. அத்தனை நண்பர்களும் நறு மணம் துய்ப்பதற்குக் காரணமாயிருந்தவன் அந்த சம்புடத்தைத் திறந்தவனே யாவன். இலக்கிய உலகத்திலும் இத்தகைய திறப்பாளர்கள் தேவையாயிருக்கிறது. ஆசிரியனுக்கும் வாசகனுக்கு மிடையே அமர்ந்துள்ள அவனை விமர்சகன் என்று சொல்லுகிறார்கள். வாசகனுக்குப் புதிய புதிய ரஸனைகளை அறிய அடியெடுத்துத் தருபவனும், ஆசிரியனுக்கு மதிப்பு சம்பாதித்துத் தருபவனும் விமர்சகனே யல்லவா?

இலக்கிய வளர்ச்சி மேலும் மேலும் பெருகுவதற்கு விமர்சனங்கள் அத்தியாவசியமானவை. அன்பின் காரணமாக ஆங்காங்கு விமர்சனப் பேச்சு பேசுபவர்களால்தான் இலக்கியச் சுவை பரவுகின்றது. நண்பர்கள் பொழுது போக்குக்காக உரையாடும் சமயங்களில் நாம் சமீப காலத்தில் படித்த சிறந்த விஷயங்களை ஒருவரோ டொருவர் சொல்லிக் கொள்வதைப் போன்ற மேன்மையான பொழுது போக்கு வேறொன்றில்லை. பேச்சுப்பராக்கில் பிறருக்கு இலக்கியச் சுவை ஊறும்படி செய்து விடுகின்றானே அவனைத்தான் தேர்ச்சியுடைய விமர்சகன் என்று கூற வேண்டும். அத்தகைய அன்பர்களின் உதவியால் தான் இலக்கிய ஆசிரியன் வளர்கின்றான். நிற்க,

'மதிப்புரை' என்றால் நன்மதிப்பாக எழுதுவது என்ற ஒரு சம்பிரதாயம் வந்திருக்கிறது. நூலில் குண தோஷங்களைச் சோதனை செய்து எழுதப்பட்ட விமர்சனங்கள் தான் இலக்கியத்துக்கு உதவுபவை. குணங்களை மட்டுமே எடுத்துப் பிரமாதமாகச் சொல்வதால் முதன் முதலில் ரஸிகனை ஏமாற்றுவதாகின்றது; அடுத்தாற்போல ஆசிரியன் தலையையும் கிறுக்கச் செய்து அவனது வளர்ச்சிக்கும் இடமில்லாது செய்து விடுகின்றது. புத்தகம், சங்கீதம், நாடகம், சித்திரம், சிற்பம் எந்தத் துறையைச் சேர்ந்த விமர்சனமாயினும் குண தோஷங்களைப் பகுத்துக் கூறும் திறமை விமர்சகனுக்கு அத்தியாவசியம்.

'கிப்பன்' என்ற பிரசித்தி பெற்ற ஆசிரியன் தனது ஆரம்ப கால அநுபவங்களைப் பற்றி யெழுதி யிருக்கின்றான். "எனது கையெழுத்துப் பிரதிகளை நண்பர்களிடம் படித்துக் காட்டுவது என்னுடைய வழக்கம். சிலர் 'பலே பலே' என்று வீணாகப் புகழ் மொழி கூறிவிட்டு நழுவி விடுவார்கள். சிலர் தூக்கியெறிந்து பேசுவார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்குப் படித்துக் காட்டுவதில் எனக்கு வர வர அலுப்புத் தட்ட ஆரம்பித்ததில் அதிசயமில்லை யன்றோ!" என்று எழுதியிருக்கின்றான்.

இலக்கியச் சுவையறியும் திறமை உலகில் சிலருக்குத்தான் உண்டு. மேலும் தாம் அறிந்தவைகளைப் பற்றி அபிப்பிராயம் கூறும் திறனுடையார் வெகு வெகுக் குறைவு. 'வாய் முத்தை உதிர்க்க அசிரத்தைப் பட்டுக் கொண்டு 'பேஷ்' என்றோ, 'நன்றாயில்லை' யென்றே ஒரே வார்த்தையில் அபிப்பிராயம் கூறுகின்றவர்களும் உண்டு. இந்தக் கூட்டத்தின் நடுவில் வசித்துப் புதிய ஆசிரியன் வளர்ச்சியடைய வேண்டி யிருக்கிறது.

விமர்சனங்களை ஏற்றுக்கொள்வதற்கு அத்தியாவசியமான சகிப்புத் தன்மை ஒவ்வொரு புது ஆசிரியனுக்கும் இருக்க வேண்டும். இனி மேல் உலகமே விமரிசன உலகம் தான். திறமையை யெல்லாம் தராசில் வைத்து நிறுப்பதுபோல அபிப்பிராயங் கூறுபவர்கள் எல்லாத் துறையிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொட்டாற் சுருங்கிகளாக வித்வான்கள் இருந்து பயனில்லை. புகழுரைகளையும் கண்டனங்களையும் ஏற்றுக் கொள்ள திராணியும் தைரியமும் இருக்கத்தான் வேண்டும். அடிக்கடி விமர்சனங்களைப் படித்துக் கொண்டிருந்தால் தான் அத்தகைய சகிப்புத் தன்மையும் ஊறும்.

ஆனால் இலக்கிய உலகத்தில் தடியடிப் பேர்வழிகள் சிலர் ஏற்படுவதுண்டு. தமிழ்நாட்டில் பிள்ளைப் பாண்டியன் ஆசிரியர்களின் தலையில் குட்டி அவமானம் செய்து வந்தானாம். இளம் ஆசிரியர்களின் காதுகளை வில்லி யென்பான் அறுத்து வந்தானாம். இந்த மாதிரி அநாகரிக முறையில் தண்டனை தரும் விமர்சகர்கள் இனி இலக்கிய உலகில் ஏற்படமாட்டார்கள். ஆயினும் விமரிசனம் எழுதும்போது இளம் ஆசிரியர்கள் மனம் அதிகமாகப் புண்படாது எழுதவேண்டியதும் மதிப்புரையாளர் கடமை.

ஆங்கில இலக்கியத்தின் அழகுக் கவிஞர்களில் கீட்ஸ் என்பவனும் ஒருவன். அவன் அகால மரணம் அடைந்ததற்குக் காரணம் என்னவென்று சொல்லப்படுகிறது தெரியுமா? 'சூரியாஸ்தமனம்' (Endymion) என்று வெகு அழகான கவிதை யொன்றை அவன் இயற்றினான். அந்தக் கவிதையைப் பற்றிக் கன்னா பின்னா வென்று 'Quarterly review'வில் யாரோ ஒருவன் விமர்சனம் எழுதிவிட்டான். அந்த விமர்சனம் கவிஞனின் மனதைப் பிளந்து விட்டதாம். அதன் பயனாக 'சூரியாஸ்தமன'த்தை எழுதிய கீட்ஸின் ஆவி அஸ்தமன மடைந்தது. இந்தச் அநியாயச் சாவினின்று உலகம் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று பைரன் தனது 'டான்ஜுவா'னில் எழுதி யிருக்கின்றான். அதிகப் பிரசங்கித்தனமாகவோ அசிரத்தையாகவோ விமர்சனம் செய்யலாகாது என்பதை கீட்ஸின் மரணம் ஆங்கில உலகுக்கு அறிவுறுத்திற்று. வளரும் ஆசிரியர்களுக்கும் துடிப்பு மிகுந்தவர்களுக்கும் விமர்சனம் எழுதும்போது அநுதாபத்தோடு ஆதரவோடு மதிப்புரை எழுத வேண்டுமென்பதும் இதனின்றும் ஏற்படுகிறதல்லவா?

—சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] சித்திரை௴ 1௳ வெள்ளிக்கிழமை (13—4—1934) [No. 20

அடுத்தபடியாக—

காந்திஜீ தமது முடிவைச் சொல்லிவிட்டார். சென்ற போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட அநேகருக்கு காந்திஜீயின் முடிவு சற்று வருத்தம் தரக்கூடும். பெரும் பெரும் தியாகங்களை, ஸ்திரீகளும் புருஷர்களும் குழந்தைகளுமாக அநேகர் செய்தார்கள். அந்தப் பாக்கியம் தங்களுக்குக் கிடைத்ததைப் பற்றி இன்றும் அவர்கள் சந்தோஷமே அடைவார்கள். தங்கள் தியாகம் வீணாயிற்றென்று அவர்கள் கருதவும் மாட்டார்கள். ஏனெனில் 1920-ம் வருஷத்திய இந்தியாவிலிருந்து 1934-ம் வருஷத்திய இந்தியா அடியோடு மாறியிருக்கிறது. அந்தத் தியாகிகளே இந்த மாறுதல் உண்டாகச் செய்தவர்கள். காந்திஜீ ஏற்றி வைத்த அக்னி அணையாமல் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் தீ. ஆகையால், இதைப்பற்றியெல்லாம் தியாகிகள் வருந்த மாட்டார்கள்; வருந்தவும் கூடாது. ஆனால், ஒரே ஒரு வருத்தம் மட்டில் இவர்களுக்கு உண்டாகக்கூடும். இலட்சியம் கண்ணுக்குப் புலப்பட வெகு தூரம் இருக்கும்போதே, தாங்கள் தொடுத்த போர் நின்றுவிட்டதே என்ற ஒரு வருத்தம் மாத்திரம் அவர்களுக்கு ஏற்படக் கூடியது இயல்பு. உலக சரித்திரத்திலேயே இணையிலாத் தலைவன் காந்தி, உயிரற்றுக் கிடந்த தேசத்திலே உயிரும் உணர்ச்சியும் ஏற்றி முன்னணியில் நின்று பெருங்கிளர்ச்சியொன்றை நடத்திய தளகர்த்தன் ஒரு முடிவைச் செய்துவிட்டார். தளகர்த்தன் சொல்லுக்கு மற்றவர் கட்டுப்பட்டே தீரவேண்டும்.

தாங்கமுடியாத நிலைமையையும் தாங்கித்தானாகவேண்டும். தேசத்தின் போராட்டத்திலே மௌனமாய் அமைந்திருக்க வேண்டிய காலங்கள் வருவது சகஜமானால், அத்தகைய ஒரு காலம் இப்பொழுதும் நேரிட்டிருக்கிறது. எப்பொழுதுமே போராட்டத்தில் கலந்துகொள்ள முடியாதவர்கள், ஆக்கவேலையிலாவது ஈடுபடுவது அவசியமாகும். பூனாவில் முடிவு செய்யப்பட்ட தனி மனிதர் சட்ட மறுப்பும் இன்று நிறுத்தப்பட்டு விட்டது. ஆக்க வேலையில் ஈடுபட விரும்புவோருக்கு இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் வேறு கிடைக்காது. மௌனமாயிருக்க முடியாத வேறு சிலரும் இருக்கிறார்கள். ஒன்றுமில்லாமலே வெறுங் கூக்குரலாவது போட்டுக் கொண்டிருந்தால்தான் அவர்கள் மனதுக்குத் திருப்தி ஏற்படும். இது அவர்களின் இயல்பு. இவர்கள் பொறுமையிழந்து, ஓயாக் கூக்குரல் போடுவதை மகாத்மாஜீ கண்டதும், தனி மனிதர் சட்டமறுப்பை நிறுத்தித்தான் வைப்போமே என்று முடிவு செய்து விட்டார். தமது வாழ்க்கை முழுவதும் சத்தியாக்கிரக தத்துவத்தை அடிப்படையாக வைத்து நடத்திவரும் அந்த மகான், இப்படித் தனி மனிதர் சட்டமறுப்பை நிறுத்தி வைப்பதால் தீங்கொன்றுமில்லை என்று முடிவு செய்ததுடன், தனி நபர் சட்ட மறுப்பு உரிமையைத் தமக்கே உரியதென்றும் வைத்துக்கொண்டார்.

மகாத்மாஜீ இந்த முடிவைச் செய்வதற்கு நேராகவோ வேறு விதமாகவோ "கைங்கரியம்" புரிந்தவர்களும், காந்தியடிகளை, சத்தியாக்கிரக தத்துவத்தை கைவிட்டவர்களுமான நாம் இந்தச் சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்; கொள்ளவும் வேண்டும்.

மேலும் காங்கிரஸ் வாதிகள், கிரமப்படி அடுத்தபடியாகச் செய்யவேண்டிய காரியம் என்ன என்பதை அறிய வேண்டும். அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி, தங்கள் திட்டங்களுக்கு அதன் அங்கீகாரத்தைப் பெறுவது அவசியமாகும். தேர்தல்களில் அவர்கள் ஈடுபடுவதானால், தேர்தல்களை மாத்திரமல்ல, சட்டசபைகளுக்குள் காங்கிரஸ் கட்சியார் கைக் கொள்ளவேண்டிய நடை முறைகளையும் திட்டங்களையும்கூட, வெளியிலுள்ள அந்தந்த மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளின் ஆதரவிலும், ஆதிக்கத்தின் கீழுமே, நடத்துவதற்கு வேண்டிய விதிகளை வகுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளிடம் பிரசாரம் செய்து அவர்களைக் கட்டுப்பாடு கொள்ளச் செய்யவேண்டும். வேலையில்லாது தவிப்போருக்குப் பரிகாரங்கள் கிடைக்கச் செய்யும் மார்க்கங்கள் காண வேண்டும். பாமர ஜனங்களெல்லாம் தங்கள் உரிமைகளை உணர்ந்து விழி பெறும்படி, பிரசாரம் செய்ய வேண்டும்; உழைப்பின் மேன்மையை உணர்ந்து, அதன் ஊதியத்தைப் பிறர் சுரண்டாதபடி பார்த்துக் கொள்ளும் ஊக்கத்தையும் பாமர ஜனங்களுக்கு ஊட்ட வேண்டும்.

"சட்டமறுப்பை நிறுத்துங்கள்"

மகாத்மாவின் அறிக்கை

காந்திஜி தேச மக்களுக்கு விடுத்த அறிக்கையின் சம்பந்தமாக கூறியதாவது.

"ஈஸ்டர் திங்கட்கிழமைத் தினத்தில் நான் உபவாச விரதம் இருந்த போது இந்த அறிக்கை என்னால் தயாரிக்கப்பட்டது. உடனே ராஜேந்திரப் பிரசாத் முதலிய நண்பர்களும் இதைப் பார்வை யிட்டார்கள்.

"சீக்கிரத்தில் சில நண்பர்கள் சட்ட மறுப்பில் இறங்குவார்கள் போலிருந்ததால் இந்த அறிக்கையை சட்டென்று வெளியிட்டு விட்டேன். இதைப்பற்றி நண்பர்களோடு கலந்தாலோசித்து காலதாமதம் செய்ய நான் விரும்பவில்லை.

இந்த முடிவும், இந்த அறிக்கையிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் தீர்க்காலோசனையின் பயனாகவும் இருதய சோதனையின் பயனாகவும் ஏற்பட்டவை. பகவான் சித்தம் அப்படி!

யார்மீதும் குறைகூறுவதற்கு யான் விரும்பவில்லை. எனது குறைகளையே நான் சொல்லிக் கொள்வதாகவே நினையுங்கள். இத்தனை வருஷ காலமாக நான் தாங்கி வந்த பொறுப்பின் காரணமாகவே இந்த அறிக்கையை வெளியிட நேர்ந்தது."

சட்டமறுப்புக்கு ஒரே பிரதிநிதி

"சத்தியாக்கிரக ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களோடு சம்பாஷித்த காலத்து எனக்கு ஆப்தமான வெகு நாளைய நண்பரொருவர், "சிறைசெல்லு மியக்கத்தை முற்றிலும் என்னால் இனி பின்பற்ற இயலாது. என் புத்தகங்களுண்டு, நானுண்டு என்று நான் இனி இருக்கப் போகின்றேன்" என்று கூறினார். சத்தியாக்கிரகக் கொள்கைக்கு இது முற்றிலும் விரோதமானது. ஆப்தமான நண்பருடைய குறைகளைப் பற்றிச் சொல்வதற்கு முன் என்னுடைய குறைகளைப் பற்றியும் பேச்சு வளர்ந்தது. அவருடைய குறைகளை நான் முன்னரே அறிந்திருப்பேனென அவர் எண்ணி யிருந்தாராம். ஆனால் நான் குருடனா யிருந்தேன். ஒரு தலைவன் குருட்டுத்தனமாய் நடந்துகொண்டால் மன்னிப்புக்கு இடமுண்டா? இதையெல்லாம் கருதிய பின்பு சட்ட மறுப்புப் போருக்கு நான் ஒரே ஒருவன் தான் பிரதிநிதி இருக்கிறேன் என்பது தெரிந்தது.

"சத்தியாக்கிரகத் தீ அணைந்து போகாதவாறு ஒரே ஒருவன் காப்பாற்றினாலும் போது மென்றும் ஆகவே தனி ஹோதாவில் அநேகர் சட்டமறுப்பில் ஈடுபடலாமென்றும் நான் பூனாவில் கூறினேன். நன்றாய் விஷயங்களை ஆராய்ந்து நோக்குங்கால் பூர்ண ஸ்வராஜ்யத்தை அடைவதற்கு சட்ட மறுப்புத்தான் வழியெனில் அந்த சட்ட மறுப்புச் சம்பந்தமான அத்தனை பொறுப்பையும் நான் ஒருவனே வகித்துத் தீரவேண்டுமென ஏற்படுகிறது.

'சட்டமறுப்பை நிறுத்துகின்றேன்'

"தேசத்தில் இதுவரை நடந்த இயக்கத்தில் சத்தியாக்கிரகத்தின் பூர்ண தத்துவங்களும் பொது ஜனங்களுக்கு உணர்த்தப்படவில்லை யென்றும் அதற்குக் காரணம் அதன் பிரயோகத்தில் கலப்படமிருந்ததே யென்றும் தெரியவருகிறது.

"தனிக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக சட்டமறுப்புச் செய்வது வேறு. ஸ்வராஜ்யத்தை அடைவதற்காகச் சட்ட மறுப்பை அவலிப்பப்பது வேறு. தற்போது ஸ்வராஜ்யத்துக்காகச் சட்ட மறுப்புச் செய்வதை காங்கிரஸ்காரர் நிறுத்திவிட வேண்டுமென்று நான் யோசனை கூறுகின்றேன். அதன் பொறுப்பை என்னிடமே விட்டு விடட்டும். சத்தியாக்கிரக சாஸ்திரத்தை என்னைவிட அதிகமாக அறிந்தவரும் ஜனங்களின் நம்பிக்கையைத் தூண்டும் சக்தி யுடையவருமான வேறொருவர் தோன்றுதிருக்கும் வரையில் என் வாழ் நாள் உள்ளவரை எங்கு அந்த இயக்கம் ஆரம்பிக்கப் பட்டாலும் என் ஆலோசனையின் பேரிலேயே நடத்தப்படட்டும். 'சத்தியாக்கிரகத்தை முதன்முதலில் ஆரம்பித்தவன்' என்ற ஹோதாவில் இந்த ஆலோசனையை நான் சொல்கின்றேன். ஆகவே என் பேச்சைக் கேட்டோ, அல்லது வேறு காரணத்தினாலோ சட்டமறுப்பில் இறங்கி ஸ்வராஜ்யத்துக்காகப் போராடுபவர்கள் அனைவரும் அதை நிறுத்திவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். இந்தியாவின் சுதந்திரப் போருக்கு இந்த வழிதான் சிறந்தது என்பது ஓர்புறம் இருக்கட்டும்.

சத்தியாக்கிரகத்தின் மேன்மை

"மனித சமூகத்துக்குக் கிடைத்துள்ள அரிய ஆயுதங்களில் சத்தியாக்கிரகமும் ஒன்று. பலாத்காரம், யுத்தம் இவைகளுக்குச் சரியான மாற்று சத்தியாக்கிரகம்தான். 'புரட்சிக்காரர்கள்' என்பவர்களின் மனத்தையும் 'ஆளுகின்றவர்'களின் இருதயத்தையும் தொடக்கூடிய ஆற்றல் சத்தியாக்கிரகத்துக்குத்தான் உண்டு. புரட்சிக்காரர்களை அடக்கவேண்டுமென்றால் அதற்காக பாரத ஜாதியின் ஆண்மையையே அரசாங்கம் நசுக்கிப் போட வேண்டுமா? இதுவரை சட்டமறுப்புப் போர் கம்பீரமாகவே நடந்துவந்திருக்கிறது. ஆனால் அநேகர் அசிரத்தையோடு அதில் ஈடுபட்டதால் அது புரட்சிக்காரர் மனத்தையும் மாற்றவில்லை; ஆளுகின்ற ஜாதியின் இருதயத்தையும் தொடவில்லை. என்ன செய்வது?

"சத்தியாக்கிரகமென்றால் அது சட்ட மறுப்பு என்று நினைக்கலாகாது. சட்ட மறுப்பை விடப் பன்மடங்கு சத்தியாக்கிரகம் பரந்த கொள்கைகளைக் கொண்டது. சத்தியத்தையும் சக்தியையும் அடைவதற்காக ஒரு சாதகன் செய்யும் சோதனைகளையே சத்தியாக்கிரகம் என்னலாம். அகிம்சா தர்மத்திற்குத் துளிக்கூடப் பிசகாதிருந்தால் தான் அது சத்தியாக்கிரகமாகும்.

இனிமேல்

"சட்டமறுப்பை நிறுத்தி விட்டவர்கள் இனி ஆக்கல் வேலைகளில் ஈடுபட வேண்டும். கதர், தீண்டாமை விலக்கு, சமூக ஒற்றுமை முதலிய பிரசாரங்களில் இறங்கலாம். சட்டத்திற்கும் அதிகாரத்துக்கும் தானகவே அடங்கி நடக்கக் கூடியவன் தான் சட்ட மறுப்பிலும் இறங்க முடியும் என்பதை நண்பர்கள் உணர வேண்டும். இந்த அறிக்கையை வெளியிட்டதனால் காங்கிரஸ் மகாசபையின் வேலையை நான் செய்து விட்டதாக எவரும் கருத வேண்டாம். 'சத்தியாக்கிரகம்' சம்பந்தமாக நண்பர்கள் என்னிடம் ஆலோசனை கேட்கின்றார்களே அதற்குத் தரப்பட்ட பதிலே இந்த அறிக்கை."

ராஜாஜியின் அறிக்கை

தற்போதைய ராஜீய நிலைமையைப் பற்றி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்:

"நியாயமான காரியங்களில் சத்தியாக்கிரகத்தை எப்படிப் பிரயோகிப்பதென்பதை நன்கு அறிந்தவர் மகாத்மா காந்தி ஒருவர்தான். அவரே நிறுத்திவிட்டால் காங்கிரஸே சட்டமறுப்பை நிறுத்தியதாகத்தான் அர்த்தம்.

"சீக்கிரத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடி இனிமேல் ஆகவேண்டிய காரியத்தை ஆலோசிக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். அநேக முக்கியமான தலைவர்கள் சமயத்தில் நம்மிடையே இல்லாது தூரத்திலிருப்பது ஒருவிதத்தில் குறையாய்த் தானிருக்கிறது. ஆனால் இத்தகைய கஷ்டங்களைக் காங்கிரஸ் எப்போதும் எதிர்பார்த்துத்தான் ஆகவேண்டும். மகாத்மாவின் ஆசியையும் உதவியையும் பெற்றுள்ள ஸ்வராஜ்யக் கட்சியினர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவுக்காக காத்திருக்க வேண்டும்,

"காங்கிரஸுக்குப் புறம்பாகவே ஸ்வராஜ்யக்கட்சியினர் திட்டம் வகுத்து கொண்டார்களானாலும், இதர காங்கிரஸ் வாதிகள் கவுன்ஸிலுக்குப் போகும் காங்கிரஸ்காரர்களிடம் நட்புரிமை பாராட்டுவதோடு, உதவியும் செய்வதே உசிதமென்று எனக்குப் படுகிறது. உதவி செய்ய முடியாத விஷயங்களில் முட்டுக்கட்டையாவது போடாதிருக்க வேண்டும். ஒருவர்க்கொருவர் சக்தி சேகரித்துத் தரவேண்டுமே யன்றி பலத்தைக் குறைக்கப் பிரயத்தனிக்கலாகாது. புதிய இந்த முறையினால் நன்மை வந்தாலும் வரலாம், வராமற் போனாலும் போகலாம். ஆனால் பிரயத்தனங்கள் வீணாகுமாறு நம்மில் எவரும் செய்யக்கூடாது. பகிரங்க மேடைகளிலோ, தனிப்பட்ட சம்பாஷணைகளிலோ ஒருவரை யொருவர் தாக்குவதாக காங்கிரஸ்காரர் பேசலாகாது. பகிரங்கப் பேச்சுகளைவிட தனிப்பட்ட சம்பாஷணைக்குத்தான் சக்தி அதிகம்.

"காங்கிரஸ் பார்லிமெண்டுக் கட்சியினர் புதிய திட்டங்களை காங்கிரஸ் திட்டங்களை யொட்டியே வகுத்துக் கொள்வார்களென்று நம்புகிறேன்."

காங்கிரஸ் கமிட்டி கூடுமா?

இனி காங்கிரஸ் மகாசபையின் போக்கை நிர்ணயிப்பதற்காக அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் ஓர் இடத்தில் கூடி ஆலோசிப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது. காரியக்கமிட்டி அங்கத்தினர்களுள் ஸ்ரீ சென்குப்தா இப்போது இவ்வுலகிலில்லை. பண்டித ஜவஹர்லாலும், ஸர்தார் வல்லபாய் படேலும் சிறைக் கூடத்தில் இருக்கின்றனர். டாக்டர் ஆலம் அவர்களும், ஸேத் யமுனலால் பஜாஜும் சொந்த அலுவல்களையொட்டி ராஜினாமா செய்திருப்பவர்கள். ஆகவே காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் கூடுவதாயின் அடியிற்கண்ட பெரியார்கள் தான் கூடமுடியும்.

மகாத்மா காந்தி, ஸரோஜினி தேவி, ராஜேந்திர பிரசாத், அபுல்கலாம் அஸாத், டாக்டர் அன்ஸாரி, ஸையத் மகமத், ஸர்தார் ஸார்தூல சிங், ஸ்ரீயுத ஆனே. (தற்போதைய அக்ராஸனர்) ஏப்ரல் மாதக் கடைசியிலோ மே மாத ஆரம்பத்திலோ கூட்டம் நடைபெறக்கூடும். காங்கிரஸ் மகாசபைக் காரியதரிசியாகிய டாக்டர் ஸையத் மகமத் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறாராம்.

இதற்கிடையே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி ஓர் முடிவு சொல்ல வேண்டுமென ஸரோஜினி தேவி முதலிய பல பிரமுகர்களின் அபிப்பிராயம் இருந்து வருகிறது. காங்கிரஸ் கமிட்டிகள் சட்ட விரோதமானவை யென சர்க்கார் பிரயோகித்திருக்கும் அமுல்கள் வாபீஸ் வாங்கப்பட வேண்டுமென ஓர் கிளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. சீமையில் மாஞ்செஸ்டர் கார்டியன் போன்ற பத்திரிகைகள் இனி சர்க்கார் காங்கிரஸோடு சமரஸத்திற்கு முனைய வேண்டுமென எச்சரிக்கை செய்திருக்கின்றன. சிறையிலுள்ள காங்கிரஸ் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டுமென்று சட்டசபையில் சிலர் கேட்கப் போகிறார்களாம். ஆனால் மகாத்மா காந்தி யுள்பட அநேக காங்கிரஸ்காரர்கள் இந்த விஷயத்தைப் பிரமாதமாகக் கருதவில்லை. இவர்கள் இதற்காகக் கிளர்ச்சி செய்யவும் மாட்டார்கள்.

இந்த நிலையில் இந்திய சர்க்கார் என்ன செய்யப் போகிறதென்பதே பிரச்னை.

பாறை கொஞ்சமாவது சிதறும்.

ஆந்திர தேசத் தலைவரான டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிருபருக்குத் தந்த பேட்டியில் மகாத்மாவின் அறிக்கை பற்றி அடியிற் கண்ட கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

"காந்தியடிகளின் அந்தராத்மா எப்போதும் தப்பே செய்யாது என்று நம்புபவன் யான். அவருடைய முடிவுகளுக்குக் காரணங்களைக் கற்பித்துக் கூறவேண்டியது அனாவசியம். ஓயாது ஒரு பாறையைச் சம்மட்டியால் அடித்துக் கொண்டிருந்தால் பாறை உடையத்தான் உடையும். நமது பாறையையே உடைத்துக் கொண்டுள்ள நாம் எதிரியின் பாறையை துளியாவது சிதருமாறு செய்து விடலாமல்லவா?"

சி. பி. ராமசாமியார் அபிப்பிராயம்

மகாத்மா சட்டமறுப்பை நிறுத்திவிட்டதைப் பற்றி எல்லோரும் அபிப்பிராயங்களைச் சொல்ல ஆரம்பித்துவிட்டால் ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர் மாத்திரம் சும்மாயிருக்கலாமா? அவரும் பிரமாதமாக ஒரு அபிப்பிராயத்தைப் பத்திரிகை நிருபரிடம் சொல்லிவிட்டார்.

"இந்த ஏற்பாட்டை சில வருஷங்களுக்கு முன்னமேயே செய்திருந்தால் இந்தியாவின் சரித்திரமே வேறு விதமாகப் போயிருக்கும்" என்று அவர் தமது அபிப்பிராயத்தின் முடிவில் அவர் கூறியிருக்கிறார். ஸ்வாமின்னு! சில வருஷங்களுக்கு முன்னே ஸ்வராஜ்யக் கட்சி சட்ட சபைகளிலிருந்ததே அப்போது இந்தியாவின் சரித்திரத்தை ஒழுங்கு படுத்துவதற்கு இந்த ஸி. பி. ராமசாமி அய்யர் ஒத்துழைத்தாரா? இல்லையன்றோ?

'எல்லோரும் நெல் உலர்த்தினால் எலியும் தன் வாலை யுலர்த்திற்றாம்' என்ற கதையாக ஸி. பி. ராமசாமி அய்யர் இந்த விஷயத்தில் அபிப்பிராயங் கூற முன் வருவானேன்?

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய
மங்கையர்க்கரசியின்
காதல் முதலிய கதைகள்
(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)

அறிப்பெடுத்த கை

அறிப்பெடுத்த கை சொறிந்து கொண்டே தானிருக்கும். சும்மா யிருக்காது. அதே மாதிரி இந்திய சர்க்காரின் அந்தப்புரத்தில் சில உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அவர்கள் முன்னம் அச்சுச் சட்ட மசோதாவொன்றைத் தயாரித்து சட்ட மாக்கினார்கள். இப்போது என்ன செய்வது? சும்மா யிருக்கவே முடியவில்லை. ஆகவே "சுதேச சமஸ்தானாதிபதிகள் பாதுகாப்பு மசோதா" என்று புதியதொரு அடக்குமுறை சாமானைத் தயாரித்திருக்கிறார்கள். சமஸ்தானங்களில் நடக்கும் ஊழல்களை யெடுத்து பிரிட்டிஷ் இந்தியாப் பத்திரிகைகூட சொல்வதற்கு இனி பயப்படவேண்டும். அப்பேர்ப்பட்ட ஓர் சுருக்கு இந்தியப் பத்திரிகைகளின் கழுத்துகளில் போடுவதற்கு ஏற்பாடாகி வருகிறது. இத்தனை நாளில்லாமல் இப்போது திடீரென்று இந்திய சமஸ்தானங்களின் மீது பிரிட்டிஷாருக்கு அக்கரை வருவானேன் என்றால் அதில் தானிருக்கிறது சூட்சுமம். வரவர சமஸ்தானங்களில் வெள்ளைக்கார திவான்களின் தொகை அதிகமாகிக் கொண்டே வருகிறதே அதைக் கவனிக்க வேண்டாமா?

அயர்லாந்தைப் பார்!

அயர்லாந்தில் அனாதிகாலந் தொட்டு பேசப்பட்டு வந்த பாஷை 'கேயலிக்' என்பது. பக்கத்தில் இருந்த ஆங்கில பூமியின் உறவினால் வரவர அந்த தேசத்தில் ஆங்கிலம் அதிகப் பழக்கத்துக்கு வந்து விட்டது. அயர்லாந்தில் தேசபக்தி யூறியதன் பயனாக இனி கேயலிக் பாஷைக்கே ஸர்வ கலாசாலைகள் போராதரவு தரவேண்டுமென சுயேச்சை அயர்லாந்தின் தலைவர் டிவாலரா சொல்லி யிருக்கின்றான். எந்தச் சர்வ கலாசாலையாவது இந்த எச்சரிக்கைக்கு செவி சாய்க்கா திருப்பின் டிவாலரா அந்த ஸர்வ கலாசாலையை ஒரு கைபார்த்து விடுவதாகச் சொல்கின்றான். கேயலிக் பாஷையும் ஆங்கில பாஷையும் ஒரே மரத்தில் வெடித்த கிளைகள் தான். ஆயினும் தேச பக்தன் ஆங்கில பாஷைக்கு இடம் தருவதற்கு மறுக்கின்றான். இந்தியச் சர்வ கலாசாலைகளில் தாய்மொழி மூலமே பாடம் நடத்தலாமா என்று ஓர் தீர்மானம் வந்தால் அது தோற்றுப் போகிறது. அயர்லாந்தில் டிவாலராவுக்கு தாய்மொழியிடம் அபாரமான பக்தியிருக்கிறது. இந்தியாவில் கல்வி நிர்வாகிகளுக்குக் காக்கை பிடிக்கும் புத்தியும் பணத்திடத்து பக்தியும் தானிருக்கின்றன.

இவன் யாரப்பா?

இங்கிலாந்தில் ஒரு 'இமிடேஷன் முஸோலினி' இருக்கிறானல்லவா அவன் பெயர் ஆஸ்வால்ட் மோஸ்லி என்பது. அவன் பிரமாதமாக இந்தியாவைப் பற்றி யெல்லாம் அபிப்பிராயம் கூறத் தலைப் பட்டிருக்கின்றானாம்.

"இந்தியாவிலேயே தங்கி அதை ஆண்டு கொண்டிருக்க வேண்டியது இங்கிலாந்தின் அவசியமான கடமையாகும். ஏனெனில் இந்தியாவின் வாழ்வு முற்றிலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கே உரியது" என்று இந்த மோஸ்லி ஓரிடத்தில் பேசி யிருக்கின்றான். நமது தலையெழுத்தைப் பாருங்கள்! இங்கிலாந்திலுள்ள சில்லரை மனிதர்களெல்லாரும் இந்திய அரசியலைப்பற்றி அபிப்பிராயம் தருவதற்குத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவை ஆண்டு கொண்டிருப்பதற்காகவே இங்கிலீஷ்காரர் என்ற ஜாதியை ஆண்டவன் படைத்திருப்பதாக சொல்லிக் கொள்ளும் பிரிட்டிஷ் வீரர் பலருண்டு. அந்தக் கூட்டத்தில் ஒருவன் தான் ஆஸ்வால்ட் மோஸ்லியும் என்பது தெரிகிறது.

துவிஜாதி யபிமானி

"ஒரு இந்தியனை விட ஒரு ஆங்கிலோ இந்தியன் கௌரவ முடையவன். ஏனெனில் அவனுக்கு ஆளும் ஜாதியாரோடு உறவு கொண்டாடுவதற்கு இடமிருக்கிறது. இந்தியன் ஆளப்படும் ஜாதியான்தானே" என்று ஓர் பிரகஸ்பதி சொன்னார். இது ஒரு ஐரோப்பியர் சொன்னதல்ல. ஒரு ஆங்கிலோ இந்தியன் சொன்னதுமல்ல. உயிரோடுள்ள ஒரு இந்தியன்—ஆக்ராவில் ஸப் ஆர்டினேட் ஜட்ஜாக இருப்பவர் சொன்னது. ஒரு நஷ்ட வழக்குக்குத் தீர்ப்பு அளிக்கும்போது இந்த அரிய வசனங்களை அவர் சொன்னார். வழக்கு எல்லிஸ் என்ற ஒரு ஆங்கிலோ இந்தியருக்கும் குப்தா என்ற ஒரு இந்தியருக்கும் நடந்ததாகும். இந்த 'நீதிபதி'யின் வார்த்தைகளைக் கண்டித்து 'அட்வான்ஸ்' பத்திரிகை எழுதியுள்ள குறிப்பில், "சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து தலை நரைத்துவிடவே, வெள்ளைத் தோலுடையவரோ, அல்லது வெள்ளைக்கார் போன்ற பெயரையுடையவரோ, வெள்ளைக்காரரோடு சம்பந்தமுடையவரோ இவர்களில் யாராயினும் அவர்கள் இதர இந்தியர்களை விடச் சிறந்தவர்கள் என்று அவருக்குத் தோன்றுகிறது போலும்" என்று எழுதியிருக்கிறது.

'டோபா' இல்லாத தலைவர்

டெல்லி சட்டசபையில் சென்ற திங்களன்று ஒரு ருசிகரமான சம்பவம். அன்றைக்கு சபைத் தலைவர் ஷண்முகம் செட்டியார் வழக்கம்போல தலைவர் அணியவேண்டிய வெள்ளை மயிர் 'டோபா'வை அணியாமல் வந்து உட்கார்ந்தார். சபை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்பு வி. எஸ். ரங்கய்யர் எழுந்து கேட்டார்.

"வழக்கமாக அணிய வேண்டிய டோபாவை அணியாமல் இன்று தலைவர் வந்து உட்கார்ந்திருக்கிறாரென்பதை நான் எடுத்துக் கூறலாமா? இதே மாதிரி ஐரிஷ் சுயேச்சை அரசின் தலைவரும் செய்திருக்கிறாராம். அதையே நமது சபைத் தலைவரும் பின்பற்றுகிறாரா என்ன?"

அப்போது ஷண்முகஞ் செட்டியார் "அக்கிராஸனாதிபதிக்கு தலை என்கிற சாமான் இருக்கும் வரை பயமில்லையே! தலையிருக்குமாயின் டோப்பா இருப்பதும் இல்லாதிருப்பதும் வெகு சிறிய விஷயம்தான்" என்று ஹாஸ்யமாகக் கூறினார்.

இப்போது டெல்லியில் பிரமாதமான கானல்! ஆகவே டோபாவில்லாமல் தலைவர் சபையில் உட்காருகின்றார். அதை ஒரு பெரிதாக இன்னொருவர் சுட்டிக் காட்டுகின்றார். எல்லாம் வேடிக்கையா யிருக்கின்றதல்லவா?

“தற்கொலை”!

(சங்கு ஸுப்ரஹ்மணியன்)

“எங்கு போய்த் தேடினாலும் உத்தியோகம் எதுவும் கிடைக்க மாட்டேனென்கிறது. பட்டப் படிப்பு படித்து என்ன பிரயோசனம்? உலக வாழ்விலேயே எனக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. தற்கொலை பண்ணிக் கொண்டு சாகலாமா வென்று கூடத் தோன்றுகிறது” என்ற அந்த இளைஞரின் சொற்கள் என் இதயத்தைச் சுரீரெனத் தைத்தன.

‘தற்கொலை!’. இது சகஜமான ஒரு வார்த்தையாக இன்று உபயோகத்தில் வந்திருப்பது காலத்தின் கூற்றுத்தான். உலகம் ஏற்பட்டது முதல் கஷ்டங்களும் மனிதனோடு உறவாடிக் கொண்டு தானிருக்கின்றன. கஷ்டங்களினின்று அடியோடு தப்பித்துக்கொள்ள ‘தற்கொலை’ என்ற ‘ஒஸ்தி’ மருந்து ஒன்று உண்டென்று, பிறந்தவன் ஒவ்வொருவனுக்கும் தெரியும். ஆனால் இந்த மருந்தை எத்தனைபேர் உலகில் இதுவரை உபயோகப்படுத்தி யிருக்கின்றனரென்பதைக் கவனிக்கவேண்டும். மிக மிகச் சிலரே தற்கொலைப் பேயைச் சரணாகதி அடைந் திருக்கின்றனர். எத்தகைய மனிதர் இந்த மருந்தைப் பற்றிக் கருதுகின்றனர் தெரியுமா? அளவுக்கு மிஞ்சிய அக்ரமமான காரியங்களைச் செய்தவனும், உண்மையை உலகத்தாரிடமிருந்து மறைக்கவிரும்புவனும், நிதான புத்தியற்றவனும், கோழையும் தான் தற்கொலை என்ற இந்த ஆயுதத்தைக் கையாண் டிருக்கின்றனர். கோழைத்தனத்தினால் இந்த எண்ணம் உதிக்கின்றது; பிறகு மூளையில் பிசகு ஏற்படுகின்றது; பித்த முதிர்ச்சியினால் செய்கைக்கும் தயாராகி விடுகின்றான் அந்தக் கேவல ஜந்து.

ஷோபன் ஹேர் என்ற வேதாந்தியின் காலத்திற்கு முன்னிருந்தே இந்த தற்கொலை சித்தாந்தத்தைப் பற்றி பலத்த வாக்கு வாதங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. ‘என் உயிரைப் போக்கிக்கொள்ள எனக்கு உரிமையில்லையா?’ என்பது ஊசிப்போன ஒரு கட்சி. தற்கொலை செய்துகொள்ள எவனுக்கும் உரிமை கிடையாது என்று உலகம் அழுத்தந் திருத்தமாய் மறுக்கிறது. சுதந்திரத்தின்மீது ஓர் மனிதன் ஆசை கொள்வதை நாம் போற்றுகின்றோம். ஆனால் சுதந்திரம், உரிமை, சட்டம் முதலிய பதங்களெல்லாம் எவ்வளவோ கெட்ட முடிவுகளுக்கு பிணைக்கப்படுகின்றனவல்லவா. அத்தகைய பிணைப்புகளில் ஒன்றே தற்கொலைக்காக உரிமை கேட்கும் கட்சியும் ஆகும். அண்டுவார் அடக்குவாரின்றிக் காலித்தனமாக நடப்பதை சுதந்திர வாழ்வென்று உலகம் சொல்லுமா? அதேமாதிரிதான் தற்கொலை உரிமை கேட்பவனையும் உலகம் தடுக்கின்றது. நிற்க,

‘தற்கொலை செய்து கொள்வதைவிட குடும்பத்தைப் புறக்கணித்து சந்யாசியாக ஓடி விடலாம்’ எனச் சில மத போதகர்கள் சொல்லலாம். ஆனால் அதுவும் தற்கொலைக்குச் சமமான ஆலோசனையே யென்று தோன்றுகிறது. தியாக வாழ்வின் முதிர்ச்சிதான் சந்யாச ஆசிரமம். கோழைகள் ஓடி ஒளியும் குகையன்று அது.

தற்கொலை தேசத்தில் அதிகமாகாது தடுக்கவேண்டியது ஆங்காங்குள்ள அரசாங்கங்களின் கடமையாகும். ‘தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பவனை தண்டிப்போம்’ என்று மிரட்டுவது மட்டும் போதாது. தற்கொலைக்கு முயன்று அந்தக் காரியத்தை சாமர்த்தியமாக நிறைவேற்றாது அகப்பட்டுக் கொண்டதற்காகச் சர்க்கார் தண்டிப்பது போல அது இருக்கலாமா? தற்கொலைக்கு மூல காரணம் எது என்பதை அறிந்து கைதியைத் திருத்த வேண்டியது தான் அரசாங்கத்தின் கடமை. தற்கொலைகள் நிகழாதவாறு சமூகத்தைக் காக்கும் கடனும் அரசாங்கத்தினதேயாகும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் பிரஸ்தாபித்த இளைஞரின் சொற்களைக் கவனிப்போம். தான் பட்டதாரியாயிருந்தும் வேலை கிடைக்கவில்லை யென்பது அவருடைய புகார். அவருடைய ‘டிப்ளோமா’க் கடுதாசிகள் சர்க்கரைப் பொட்டணத்துக்குத்தான் லாயக்காகும் ஓர் கடினமான நிலைமை தேசத்தில் ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது. “நான் படித்தவன். பேனாவைத் தான் ஓட்டி ஜீவிப்பேன். மேஜை—வேலை தான் வேண்டும்” என்று பிடிவாதம் பேசுவதில் இனி பிரயோசனமே யில்லை. அநேக இளைஞர்களுக்கு வாழ்வில் கசப்பு ஊறுவதற்கு மூல காரணம் தப்பிதமான வறட்டு ஜம்பமே யாகும். அந்த ஜம்பத்தைக் கழற்றி யெறிந்து விட்டால் எத்தகைய வாழ்வுக்கும் ஒரு இளைஞன் தயாராகி விடுவான்.

தேசத்தில் இவ்வளவு கடுமையாக வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதற்கு அநேக காரணங்களுண்டு. சொந்த நாட்டில் தொழிற்சாலைகள் ஓங்கவில்லை. அந்நியச் சரக்குகள் இறக்குமதியாவது தடுக்கப்படவில்லை. பணங் கொழுத்தவர்கள் பக்கத்திலிருக்கும் கஷ்டத்தைத் துளியும் கவனிக்காது ‘தானடித்த மூப்பாய்’ வாழ்கின்றனர். ஜனக் கூட்டமோ தேசத்தில் வர வர வலுத்து வருகின்றது. தேசத்தின் இந்த நிலையை மாற்றி யமைக்க இளைஞர் முயலக் கூடாதா? அதைச் செய்யாமல் மனக் கோழைகளாக அலைவானேன்? எல்லாவற்றையும் நோக்கும்போது ‘தற்கொலை’ என்ற இந்த வார்த்தையையே நமது பாஷையினின்று கொன்று போட வேண்டுமென்று தோன்றுகிறது.

மந்திர மகிமை

(பண்டித மாளவியா எழுதியது)

விலை அணா 2

இந்த அரிய நூலில் பண்டித மாளவியாஜீ, அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷரம் ஆகிய மந்திரங்களின் மகிமையை, வேத சாஸ்திர புராணேதிகாச ஆதாரங்களுடனும் பல மேற்கோள்களாலும் விளக்கி எழுதியிருக்கிறார். நேர்த்தியான தமிழ் மொழி பெயர்ப்பு. ஹிந்து மதாபிமானிகள் யாவரும் படித்துப் பயனடையவேண்டிய நூலாகும்.

சுதந்திரச் சங்கு காரியாலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

கரும்பாயிரத்தின் கதை

(என். பிச்சமூர்த்தி எழுதியது)

"அப்பா கரும்பாயிரம்! இந்த வாட்டியோடே ஆறு மாமாங்கம் பாத்தாயிடுச்சு. ஒங்க அத்தா போய் ஒரு வருசம் ஆவப்போவது. அதுவெ பிடிச்சு ஒரு நாளைக்குநாச்சும் என் கூட நீ சாப்பிட்டாயா, சொல்லு?"

"என்ன மோசம் அம்மாயி?"

"கிழக் கோட்டானாயிட்டே னல்ல. பஞ்சாங்க அய்யரு பொறக்கற மாசத்துலெ ஒன் பேரனுக்கு கருமம் செய்ய நேரம் வருதுன்னு நேத்து சொன்னாரு ....வந்தா வரட்டும். பயமில்லெ எனக்கு. இருந்தாலும் ஒன்னோடெ ரெண்டு நாளாச்சும் சோறு தின்னாத்தான் நெஞ்சு வேவும்....பல பல இங்கறத்துக்குள்ளார ஒங்க ஆலையிலே சங்கு ஊதிப்பிடுராக! நீ ஓடிப் பூடரே... அப்பறம் மூணு மணிக்கு இம்மாஞ்சோறு தின்னரது நீ இல்லாமெ சொகப்பட மாட்டேன்குது. ரெண்டு வேளை நாச்சும் சேந்தாப்போல உக்காந்து சோறு திம்போம். அப்பறம் எது வேணு வரட்டும். சந்தோசமாய் போயிடரேன். என்ன சொல்றே?"

இப்பேச்சைக் கேட்ட கரும்பாயிரத்திற்கு மில்லுக்குப் போக மனம் வரவில்லை. வருஷம் முழுவதும்தான் உழைத்தாகிறது. இரண்டு நாள்தான் ரஜா வாங்கிக் கொள்வோமே என்று நினைத்துக்கொண்டு ஒருமனு எழுதி, பக்கத்து வீட்டுச் சோமுப்பிள்ளையினிடம் கொடுத்தனுப்பி விட்டான்.

"அம்மாயி! ரெண்டுநாள் ஒன் கூடவே இருக்கேன். சாப்பிடரேன். சந்தோசமா இரு; இருக்கியா?"

கிழவியின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. என் ராஜா என்று அவனைத் தட்டிக் கொடுத்தாள்.

"அம்மாயி! இன்னிக்கு என்ன சமைக்கச் சொல்ல? ஒனக்கு என்ன வேணும்?"

"இன்னிக்கு முள்ளங்கி, வெங்காயம், அப்பறம், ஹூம், அப்பறம்—

"எறைச்சி"

"செ! சாவப்போற காலத்துலெ அது ஏண்டா எனக்கு? நான் சொன்னேனே அதுவும் பெருங்காயமும் கொத்தமல்லியும் பருப்பும் வாங்கிக்கிட்டு வா. நல்ல சாம்பாரா வச்சிக்கிட்டு ஊத்திக்கிடுவோம்."

ஆனால் சரியென்று கரும்பாயிரம் மார்க்கெட்டுக்குக் கிளம்பினான். அவன் வாசல் வரையில்கூடப் போகவில்லை.

"ஏ கரும்பாயிரம்! போரப்பே கூப்பிடரேன்னு நெனைக்காதே. நானும் சும்மாகூட வாரேன்." என்றாள் கிழவி.

அதன் பேரில் இருவருமாக மார்க்கெட்டிற்குக் கிளம்பினார்கள். மருமகள் குளத்துக்கு முழுகப் போய்விட்டாள்.

மார்க்கெட் அண்டை வந்ததும் கிழவியை முள்ளங்கியும் கொத்தமல்லியும் பருப்பும் வாங்கச் சொல்லிவிட்டு தான் வெங்காயம் கொண்டு வருவதாகப் போய்விட்டான். சிறிது நேரம் சென்று இரண்டு சுமாரான மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு திரும்பிவந்தான்.

மார்க்கெட் வாசலில் கிழவி உட்கார்ந்திருந்தாள்.

"ஏதப்பா கரும்பாயிரம்! இம்மாம் பெரிய மூட்டை?..........அடெ! இது என்ன? இம்மாம் பெரிய வெங்காயம்?" என்று கிழவி வியப்புற்றாள்.

"மேஸ்திரி நாயக்கருக்கு வந்துச்சாம். நேத்து என்னை எடுத்துக்கிட்டு போகச் சொன்னாரு. மறந்து பூட்டேன். நீ சொல்லாங் காட்டியும் ஞாபகம் வந்தூடுச்சு. அதான் போய் எடுத்துக்கிட்டு வந்தேன்....சாமியல்ல குடுக்குது—சாவப்போர கிழவியாச்சே இன்னாட்டு....ஒசத்தி வெங்காயம்!"

"அந்த மூட்டை?"

"மள்ளாக் கொட்டை; நாயகரு கொடுத்தாரு."

"இம்புட்டுத் தானே, தம்பி, கிளம்பு" என்று எழுந்தாள் கிழவி. அதற்கு ஐந்து நிமிஷம் பிடித்தது.

"வா அம்மாயி! மெதுவா நட. தள்ளாத வயசு. ஊட்டுலே இருன்னா கேக்கறயா?....இந்தா கையைப் பிடிச்சுக்கிட்டு வா—அனாவஷியமா சங்கட்டப் படரே!"

"என்ன சங்கட்டம்டா? நாளைத்தரிச்சு ஒன்கூட இப்படி வர முடியுமா? ....சும்மா நடந்து போ."

வெங்காய மூட்டையையும் கடலையையும் சேர்த்துக் கட்டி தலையில் தூக்கிக் கொண்டு கரும்பாயிரம் கை வீசி நட[illegible]தான். கிழவி மெதுவாகப் பின்ன[illegible] வந்து கொண்டிருந்தாள்.

பேரனுக்கு பால்யமும், கடும் நடையும், தலையில் பாரமும் இருந்தபடியால் கிழவிக்கும் அவனுக்கும் நடுவே அரை பர்லாங்குக்குமேல் தூரம் ஏற்பட்டுவிட்டது. பின்னும் இரண்டொரு நிமிஷம் நடந்து செல்லுமுன் கரும்பாயிரத்திற்கே திகிலுண்டாகும்படியான காட்சி தென்பட்டது. தெரு முழுதும் ஜே ஜே என்று கூட்டம். ஒரே இரைச்சல். அதிலும், அவ்வளவு பேரும் தன்னுடன் மில்லில் வேலை செய்யும் பெண்களும் ஆண்பிள்ளைகளும், வாலிபர்களும், ரோட்டுக்கு வலது புறமிருந்த போலீஸ் ஸ்டேஷனை அவ்வளவு பேர்களும் பார்த்துக்கொண்டிருந்தனர். பலர் முகத்தில் திகைப்பும், முன்னணியில் நின்றவர் முகத்தில் கோபமும் ஆவேசமும் குடிகொண்டிருந்தன. ஸ்டேஷன் கேட் சாற்றப்பட்டிருந்தது. ஸ்டேஷன் ரூம் ஜன்னலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் தலை தெரிந்தது. ஜனங்கள் "அவனை விடறயா இல்லையா?" என்று அடிக்கடி கத்திக் கொண்டிருந்தார்கள். இன்ஸ்பெக்டர் என்ன சொன்னாரென்பது யார் காதிலும் படவில்லை. இன்ஸ்பெக்டர் கையை விரித்து சமிஞ்ஞை செய்தார்.

"எங்கரேன், இது என்ன இது?" என்று கரும்பாயிரம் பக்கத்திலிருந்தவனைக் கேட்டான்.

அவன் யாரோ வழிப்போக்கன். "பலபேர் பலதினுசா சொல்றாங்க. யாரோ மில்லிலெ வேலைக்கார பொம்பளை, கொஞ்சம் அளகா யிருப்பாளாமே?

"ஆமா."

"அவமேலெ மானேஜர் ஒரசிக்கிட்டு போயிட்டாருன்னு கூப்பாடு போட்டாளாம். அவ புருசன்காரன் கீழே கிடந்த இரும்புக் குச்சியை எடுத்துக்கிட்டு மானேஜரைத் துரத்தினானாம். அவரு பயந்துகிட்டு ஓடியாந்து இந்த போலீஸ் ஸ்டேசனுக்குள்ளார பூந்துகிட்டாரு. இந்த பாக்கி ஆளுங்க இருக்கிறான்களே, அவங்களும் இன்னிக்கு 'அவன் பெண்ஜாதிக்கு வரது நாளைக்கு நமக்கும்' இன்னுட்டு, கூட சேந்துகிண்

டாங்களாம். மானேஜரை வெளியே வரச்சொல்லுன்னு கத்தறாங்க."

"மானேஜர் புதுசு. கொஞ்சம் கடுமைக்காரரு. ஆனால் இந்த வளி யெல்லாம் போவமாட்டாரே?"

"அதான் ஒருத்தன் சொன்னான். எப்போதும் போல குடிச்சூட்டு அவ புருஷன் வந்தானாம். இல்லாத ஹாட்டியெல்லாம் அடிச்சானாம். அதுக்காக மானேஜர் அவனை வேலைக்கு வேண்டாம்னுட்டாராம். அதுவெ பொம்பளைக்கு வவுத்தெரிச்சல். மானேஜரை வாயா வார்த்தையா கேக்கக்கூடாது? புள்ளை, குட்டி இன்னு பேசினாளாம். "மரியாதைப் போரியா இல்லாட்டி"—இன்னாராம். அப்படியா சமாச்சாரம் னாட்டு இப்பிடிக் கத்தினாளாம். மனேஜர் பயந்து பூடுவாரு இன்னு ரோசனை. அது ஒரு கலாட்டாவாய்ப் போய் கலகத்திலெ முடிஞ்சூட்டுதாம்."

"அப்புடி இருக்கும்" என்றான் கரும்பாயிரம். மேலே பேச முடியவில்லை. காரணம் "மானேஜரை வெளிலெ தள்ரீங்களா இல்லாட்டி—" என்று பல ஸ்தாயியில் பல குரல்கள் ஏக காலத்தில் கிளம்பினதுதான்.

கரும்பாயிரம் பரம ஸாது. நமக்கேன் வம்பு என்று நடந்து செல்லப் பிரயத்தினப் பட்டான். அவனுக்கு முந்தியும் பிந்தியும் இருந்த ஜனங்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து இடித்துக் கொண்டிருந்தார்கள். முன்னே போக முடியவில்லை.

"கதவைத் தொறக்குறீங்களா இல்லையா?" என்ற கூக்குரல்கள்.

ஸ்டேஷனுக்குள்ளிருந்த இன்ஸ்பெக்டருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. மானேஜரை வெளியேயும் விட முடியவில்லை. உள்ளே வைத்துக் கொள்வதென்றால் ஆபத்தா யிருந்தது. ஓட்டின் மீது கற்கள் வந்து விழுந்ததும் அவருக்கு தைரியம் பிறந்தது.

"போறேளா இல்லியா? என்றார் இன்ஸ்பெக்டர்.

"இதோ போறோம்ங்க" என்று பரிஹாஸமாய் ஆட்கள் பதில் சொல்லினர். ஒருவன் மட்டும் வெறிகொண்ட முகத்தோடு ஸ்டேஷன் சுவற்றின் வெளி விளிம்பைப் பிடித்துக்கொண்டு, அதன் பேரில் ஏறி ஓட்டின் மீதாக உள்ளே செல்ல பிரயத்தனம் செய்தான்.

"அவன் யார்?" என்றான் வழிப் போக்கன்.

"அவள் புருஷன்!" என்றான் கரும்பாயிரம்.

அதுவரையில் பொறுத்துப் பார்த்த இன்ஸ்பெக்டருக்குத் தாங்கவில்லை. ஆத்திரம் பொங்கிற்று. பட்டப்பகலில் கொள்ளைக்காரர் மாதிரி ஒரு கூட்டத்தார் நடப்பதென்றால்? நடக்கும்படி ஒரு போலீஸ் அதிகாரி விடுவதென்றால்? கலகம் முற்றி உள்ளே இருப்பவர்கள் உயிருக்கும் ஸ்டேஷன் சொத்துக்களுக்கும் ஆபத்து நேரிட்டு விட்டால்? "போறேளா இல்லையா—ஒரு தரம்?" என்று கூவினர்.

சுவற்றில் ஏறியவன் பின்னும் ஏறிக் கொண்டிருந்தான்.

"போக மாட்டீர்களா இரண்டாம் தரம்? மூன்றாமுறை சுட்டுவிடுவேன். ஐந்து நிமிஷம் கொடுக்கிறேன். போங்கள்."

இன்ஸ்பெக்டர் ஹம்பக் செய்கிறார் என்று நினைத்து ஜனங்கள் கெக்கலித்தார்கள். ஏளனச் சிரிப்பு அடங்கியதும் நிசப்தம். எல்லோரும் ஓட்டின் மீது பார்த்தார்கள். இன்ஸ்பெக்டர் காதில் ஓடு நொருங்கும் சப்தம் விழுந்தது. "நல்ல மனிதனுக்கும் கருணையுள்ளவனுக்கும் காலமில்லை" என்று நினைத்தார். "விடாதே. உள்ளேகுதி" என்று குரல்கள் உற்சாகப் படுத்தின.

கரும்பாயிரத்திற்கு திகில், எப்படியேனும்; கூட்டத்தைவிட்டு வெளியேறினால் போதுமென்றாகி விட்டது. தெய்வமே என்று அடுத்த தெரு வழியாய்ப் போயிருக்கலாம். ஆனால் அவனுக்கு ஜோஸ்யம் தெரியுமா? இப்பொழுது பின்னும் போக முடியவில்லை. முன்னும் போக முடியவில்லை. கூட்டமோ அலை புரளுவதைப்போல் அசைந்து கொண்டிருந்தது. என்ன செய்வான் கரும்பாயிரம்?

"மூன்றாம் தரம்—சுடு" என்ற வார்த்தைகள் உறக்கக் கேட்டன. ஸ்டேஷன் ஜன்னலிலிருந்து துப்பாக்கிகள் தோட்டாவைக் கக்கின.

கூட்டம் நெல்லிக்காய் மூட்டையைப் போல் சிதறி ஓடிற்று. எங்கும் உயிருக்கு மன்றாடி ஓடும் ஓலங்கள்! ஓடும் முயற்சியில் கால் மிதிபட்டு ஜனங்கள் விழும் காட்சி! ஓர் குண்டுபோய் திகைத்து நின்ற கரும்பாயிரத்தின் விலாவில் பாய்ந்தது "ஐயோ! அம்மாயி!" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தான்.

கூட்டம் உடனே மறைந்து போயிற்று. போலீஸ்காரர் சுடுவதை நிறுத்தினார்கள். ஓட்டின் மேல் நின்றவன் 'அலங்க மலங்க' விழித்துக்கொண்டிருந்தான்.

போலீஸ் ஸ்டேஷன் கதவு திறக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் வெளியே வந்து கரும்பாயிரத்தைப் பார்த்தார். வலது விலாவிலிருந்து உதிரம் கொட்டிக் கொண்டிருந்தது. அப்படியே இடது விலாவினின்றும். மெதுவாக ஒரு மோட்டாரில் ஏற்றி அப்படியே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். ஓட்டின் மேல் இருந்த ஆளை இறக்கி கைக்கு விலங்கிட்டார்கள். வெங்காய மூட்டையும் கடலை மூட்டையும் கவனிப்பாரற்று மண்ணில் கிடந்தன.

ஓடிப்போன ஜனங்களில் சிலர் கரும்பாயிரம் அடிப்பட்டதைக் கண்டார்கள். "ஐயோ பாவம்!" என்று சொல்லிக்கொண்டே பின்னும் ஓடினர்.

இவ்வளவு சம்பிரமங்களும் நடந்தது ஒரு பத்துப் பன்னிரெண்டு நிமிஷங்களுக்குள் மேற்கு திக்கிலிருந்து தளர் நடையுடன் கிழவி வந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து விட்டு சோமுப்பிள்ளை "ஐயோ பாட்டி! கரும்பாயிரத்து வவுத்துலே குண்டு பாஞ்சூட்டுது. ரத்தம் ஊத்துது." என்று பதறிப்போய் சொன்னான்.

கிழவிக்குச் செய்தி திடீரென்று கிடைத்ததால் பிரமையைத் தவிர அழுகை வரவில்லை. சற்று வேகமாய் நடந்தாள். சோமுப் பிள்ளையும் பின் தொடர்ந்தான். ரோட்டில் கிடந்த மூட்டைகளையும் ரத்தக்களரியையும் பார்த்ததும் "அட மகனே! என் ஆசையா உனக்கு நமனாய் வந்துச்சு?" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். அதற்குள் சோமுப் பிள்ளை ஸ்டேஷனுக்குள் போய் விசாரித்ததில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போகப்பட்ட விபரம் கிடைத்தது. இருவரும் ஒரு வண்டியில் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார்கள்....

ஆஸ்பத்திரியில் ஒரே கூட்டம். சஸ்திர சாலைக்கு வெளியே இருக்கும் பெரிய ரூமில் ஆறு டாக்டர்கள் நின்று கொண்டிருந்தனர். வராண்டாவில், அறைக்குள் எட்டி எட்டிப் பார்க்கும் ஆள்க் கூட்டம். டாக்டர்கள் முகத்தில் நிமிஷங்களைக் கணக்கிடுவது போன்ற தோற்றம்.

படுக்கையில் பெரிய கட்டுகளுடன் கிடந்த கரும்பாயிரம் வெகு பிரயாசையுடன் ஒரு தரம் கண் விழித்துப் பார்ப்பான். மறுபடியும் கண்ணை மூடுவான். "அம்மாயி!" என்று பெருமூச்செறிந்து கொண்டே திரும்பவும் கண்ணைத் திறப்பான்.

கிழவி வந்து சேர்ந்தாள்—ஹோவென்று வரும் பெரு மழையைப்போல் நோயாளியின் அறைக்கு வந்தாள். டாக்டர்களுக்காவது இதரர்களுக்காவது அவளைத் தடுக்கத் தோன்றவில்லை.

"அட பாவிப்பையா! சேந்து சாப்பிடுவோன்று சொன்னத்துக்கா இப்பிடி மோசஞ்செஞ்சு பூட்டே! கண்ணே கரும்பாயிரம்" என்று அலறினாள். விம்மினாள். அவனைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். கரும்பாயிரம் கண் திறக்கவில்லை. ஐந்து நிமிஷங்கள் சென்றன. "அம்மாயி! அம்மாயி!!" என்ற கொஞ்சும் குரல் பேரன் வாயிலிருந்து வந்தது. பாட்டியின் முகத்தைப் பார்த்தான். ஆள் குறிப்பு உணர்ந்தானோ என்னவோ! அவ்வளவு தான்....கிழவியின் துன்பம் கரை புரண்டு ஓடியது........

வெளியே வராண்டாவில், கரும்பாயிரத்தின் கதையைக் கேட்டவர்களில் சிலர் "கடவுளின் திருவுளம்" என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

தாயாரின் திருப்தி

(கு. ப. ராஜகோபாலன் எழுதியது)

பங்குனி மாஸத்து வெய்யில் சுள்ளென்று அடித்தது. தலை வெடித்துப் போகும் போன்ற தாபம். உச்சிகால வேட்கை மிகுதியால் உலகமே மயங்கியிருந்தது. காக்கைகள்கூட வாயைத் திறந்துகொண்டு மௌனமாக மரங்களில உட்காந்திருந்தன. நாய்கள் மட்டும் எச்சில இலைகளுக்காக பிரமாதமாக ரகளை செய்துகொணடிருந்தன. பிராமணாகள் துடித்துக்கொண்டு நடந்து வந்து சோந்தார்கள்.

புரோஹிதர் கண்ணை மூடிக்கொண்டு மந்திரங்களை அர்த்தமில்லாமல் ஓட்டினார். பிராசீனவிதி, பவித்ரம், திருத்வா என்பவைகளையும மநதிரத்துடன சேர்த்து ஒரே ராகத்தில் பாடிக்கொண்டே போனார். பிராம்மணர்களுக்கு வஸ்திரம, குடபம, தக்ஷிணை இவைகள் கொடுககப்பட்டு சாப்பிட உட்காாந்தாாகள்.

சுந்தரேசய்யரின் தாயாருக்கு அன்று சிராத்தம. அவா நாஸதிகருமல்ல, ஆஸதிகருமல்ல. தென்னிநதிய ஆங்கிலம படித்த பிராமமணர்களின் திரிசங்கு ஸ்வாகக் கூட்டத்தாரைச் சோ்நதவா. ஸ்னன ஸந்தியா வந்தனாதிகள் விதிப்படி நடக்காது. ஆனால் தர்ப்பணமும சிராத்தமும் மட்டும் தவறாமல் நடைபெறும. அந்த தினங்களில் மட்டும விபூதி பஞ்சகச்சம இவைகள் பவித்திரத்தைச் சந்திக்கும். சுந்தரேசயயரிடம பலனை ஒனறும விளஙகும். அவர் அதில் அஸாததிய மோகங்கொண்டவர். ராம ஸங்கீர்த்தனத்தில் உருகிக் கண்ணீர் விடுவார். ஆனந்தத் தாண்டவ மாடுவார். அதற்காக அவரை ஊரில் கொஞசம் கேலி கூட செயகிற துண்டு. ஆனால் மொத்தத்தில் வெகு ஸாதுவான பிரகிருதி. பிச்சைக்காரனானாலும் ஏதாவது கொடுக்காமல் அனுப்ப மாட்டார். அதிலும் கூன் குருடென்றால் 'அரை, கால் என்று' கொடுத்து விடுவார். இதற்காக அவரைப்பற்றி ஊரில் உலகம் தெரியாதவரென்றும் கொஞ்சம் 'கிறுக்கு' மனுஷனென்றும் பேசிக் கொள்வதுண்டு.

பிராமமணர்கள் சாப்பாடு முடிந்து பிண்ட பிரதானமும் ஆய்விட்டது. பிராமணர்கள் 'திருப்தி சொல்லவேண்டியது சட்டம். சுந்தரேசய்யரின் மூன்று வயதுக் குழந்தை, வாசலில் விளையாடிக் கொண்டிருந்தவன் உள்ளே ஓடிவந்து.

"அப்பா, வாசல்லே பாட்டி வந்திருக்கா. சாதம் வேணுமாம் என்றான்.

"பாட்டி வந்திருககாளா? அதாரு?" என்று கேட்டுக்கொண்டு சுந்தரேசய்யர் வாசலில் போயப பார்த்தார்.

வாசற்படியில் கையில் தடியும் தகரக் குவளையுமுள்ள ஒரு குறுக கிழவி சாய்ந்துகொண டிருந்தாள.

"ஐயோ கிருகிருண்ணு வருதே. இந்தப் பாவி ஊாலே ஒரு பிடி சோறு போடரவங்க இல்லியா? ஐயோ!" என்று பெரு மூச்சுகளினிடையே சொல்லிக்கொண்டிருந்தாள்.

அந்தத் தவிப்பைப் பார்த்த சுந்தரேசய்யர் மனதில் திடீரென்று ஏதோ ஓர் எண்ணம் ஏற்பட்டது. 'ஜாதியாசாரம்' என்று சொல்லப்படும் மூட பக்தியை மனிதனின் ஸ்வபாவ குணமான இரக்கம் ஒரே அடியில் வென்று விட்டது. ஒரு நிமிஷத்தில் என்ன செய்ய வேண்டு மென்பதையும் தீர்மானித்து அதற்கு மத நம்பிக்கைக் கேற்ற சமாதானத்தையும் மனதிற் கொண்டார்.

சட்டென்று உள்ளே சென்று ஒரு பிண்டத்தையும் தன் தீர்த்த கலசத்தையும் எடுத்துக்கொண்டு வாசலில் வந்து, உருண்டையைக் கலசத்தில் கரைத்துக் கிழவியின் குவளையில் 'பிடி' என்று ஊற்றினார். அதை மடமடவென்று குடித்துவிட்டு,

"அப்படா! உசிர் வந்திச்சு! மவராசா நீ நல்லா இருக்கணும். உன்னைப் பெத்த வயிறு எம் வயத்தைப் போல குளுரணும்." என்று சொல்லிச் சிரமம் மேலிட்டு படியில் சாந்துவிட்டாள்.

"என்ன, என்ன?" என்று ஓடி வந்து பிராமணர்கள் இதைப் பார்த்து திகைத்துப் போய் "அடாடாடா! என்ன அபசாரம்! சிராத்தம் நஷ்டமாய் விட்டதே! பித்ரு சாபம் லபித்து விட்டதே! என்ன அக்கிரமம்? யார் இப்படி சிராத்தம் செய்யச் சொன்னார்கள்?"

"என்" என்றார் சுந்தரேசய்யர்

"வாயஸஸத்துக் கூட இன்னும் பிண்டம் வைக்கவில்லை. பித்ருக்கள் காக்கையாக வந்து காத்திருப்பார்களே!"

"மனித ரூபத்துடன் வந்த என் தாயார் இதோ திருப்தி யடைந்து விட்டாளே! காக்காயைக் காட்டிலும் மனித ஜன்மா மேலல்லவா?"

"உங்களுக்குப் பைத்யம் பிடித்து விட்டது. உம். இனிமேல் இங்கே ஜலபானம் செய்யக் கூடாது. ஒய் சாஸ்திரிகளே தாம்பூலத்தை இங்கேயே எறிந்து விடும்" என்று சொல்லி பிராம்மணர்கள் வஸ்திரம் கும்பம் தக்ஷிணைகளை கைபடாமல் எடுத்துக் கொண்டு, கீழே கால் வைத்துக்கூட நடக்காமல் சென்றார்கள்.

"ஐயோ, இதென்ன இப்படிச் செய்துட்டேளே?" என்று கவலையோடு மனைவி வெளியே வந்தாள்.

"என்னடி அசடு! வாசலில் பார் அம்மா உருவெடுத்து வந்திருப்பதை!"

அன்று பௌர்ணமி. நிலவுக் கடலில் இந்த உலகமே மிதந்து கொண்டிருந்தது. காற்றோ குளுகுளு வென்று ரமணீயமாய் வீசியது.

ஆனல் ஈரினுக்கு மட்டும் தூக்கம் பிடிக்கவில்லை.

ஈரின் எழுந்து சென்று சாளரத்தின் வழியாகச் சந்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஈரின்! தூங்குகிறது தானே! இந்த ஊதக் காற்றால் உடம்புக்கு ஏதாவது வந்துவிடும். போய்ப் படுத்துக்கொள்" என்றாள் அவளது அன்னை.

"தூக்கம் வரவில்லையே யம்மா! அதோ, அந்த சந்திரனைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். 'போன நாட்கள்' எங்கு போயின என்பதைப் பற்றி யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். ஒன்றும் புரியவில்லை. அதிசயமாகத் தானிருக்கிறது; எங்கே யம்மா 'அவைகள்' போயிருக்கும்?" என்று கேட்டாள் ஈரின்.

"'போன நாட்கள்' எங்கு போயின, என்னவாயின, என்பதைப் பற்றி எனக்கும் ஒன்றும் தெரியாது. ஆனல் 'புது நாட்கள்' துன்பங்களையும் வயோதிகத்தையும் கொண்டு வரப் போகின்றன வென்பது மட்டும் நிச்சயம். அப்போது உன் அழகெல்லாம் மாய்ந்துவிடும். உனது கரிய கூந்தல் வெளுப்பாகிவிடும். ஈரின்! இந்த நாட்கள் உன்னிடம் வர இன்னும் எவ்வளவோ காலம் இருக்கின்றது. போ, படுத்துக்கொள்" என்று கூறிய வண்ணமே ஈரின் இதழில் முத்தமிட்டாள் அவள் தாயார்.

தாயாரும் தூங்கிப் போய்விட்டாள். ஈரினே தூங்கவில்லை. அப்போதும் அவள் 'போன நாட்களை'ப் பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அந்த சமயத்தில் சாளரத்தின் வழி

[நீங்கள் 'போன நாட்களை'த் திரும்பப் பார்க்க முடியுமா? ஆனல் ஈரின் என்ற சிறுமி 'போன நாட்களை' மறுபடியும் பார்த்ததாக ஒரு பிரஞ்சு ஆசிரியர் கதை எழுதினர். அதைத் தழுவி தமிழ்த்த இயற்கையா யமைந்துள்ள தளிர் நடையில் 'இளங்கோவன்' எழுதியிருக்கின்றர்.]

யாக நூதனத் தோற்றமுள்ள குள்ளக் கிழவன் ஒருவன் தோற்றினன்.

"ஈரின்! நீ 'போன நாட்களை'ப் பார்க்கவேண்டுமா?" என்று கேட்டான் அக்கிழவன்.

"ஆமாம்! உன்னல் காண்பிக்க முடியுமா?" என்று கேட்டாள் ஈரின்.

"முடியும் வா. இதோ, என் கையைப் பிடித்துக்கொள்; சந்திரனிடம் போகலாம். அங்கு தேவதைகளும் 'போன நாட்களு'ம் வசிக்கின்றன."

ஈரினும் அவனது கையைப் பிடித்தாள். அவ்வளவுதான் தாமதம்! இருவரும் வான வெளியில் மெதுவாகப் பறந்து சென்றனர்.

அவர்கள் அருகிற் செல்லச் செல்ல சந்திரன் பெரிதாகிக்கொண்டே வந்தது. அவர்கள் சந்திரனை யடைந்த போது அங்கு மணற்காடுகளும், பெரும் பாறைகளும், பிரதிபலிக்கும் ஒளித்திரளும் தவிர வேறென்றும் காணப்படவில்லை. அவர்களுக்கு எதிரில் ஓர் பெரிய துவாரம் இருந்தது.

"ஓ! இது என்ன துவாரம்? என் இவ்வளவு இருண்டிருக்கிறது?" என்று ஆசையோடு கேட்டாள் ஈரின்.

"இதுவா! இதுதான் எங்கள் தேசத்தின் வாயில். நாங்களெல்லாம் சந்திரனுக்குள் வசிக்கிறோம். இத் துவாரத்தையே உங்களது பூமியில் 'சந்திரனிலுள்ள களங்கம்' என்று அழைக்கின்றனர்" என்றான் குள்ளக் கிழவன்.

"அப்படியா! கீழே ஒரே இருளாயிருக்கும் போலிருக்கிறதே! கணக்கற்ற தீபங்கள் எரியுமென்றே நினைக்கிறேன்" என்றாள் ஈரின்.

"இல்லை. எங்களுக்கு விளக்குகள் வேண்டியதில்லை. எங்கள் உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும் சூரியனைப்போல ஒளியுண்டு. நீ இப்போது கொஞ்சம் கண்களை மூடிக் கொள்" என்றான் கிழவன்.

ஈரினும் அவளது அழகிய கண்களை மூடிக்கொண்டாள். மீண்டும் திறந்த போது அவள் ஓர் பெரிய அரண்மனையினுள் நின்றுகொண்டிருந்தாள். அந்த அரண்மனை ஸ்படிகக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. எங்கும், எதனிலும் மோகனச் சோதி வீசியது. ஈரின், தான் படித்துள்ள, கேட்டுள்ள தேவதைகளை யெல்லாம் பார்த்தாள். அவர்களிடம், தான் 'போன நாட்களை'க் காண்பதற்கு வந்திருப்பதாகச் சொன்னள்.

தேவதைகள் முகத்தில் துக்கம் ததும்பியது. "'போன நாட்கள்! போன நாட்கள்!! சரி, ராணியிடம் போவோம் வா! அவள் 'நினைவுத் தேவனை'க் கூப்பிடுவாள். அவன் நீ விரும்பியவற்றை யெல்லாம் காண்பிப்பான்" என்று கூறி தேவதைகள் ஈரினை அழைத்துச் சென்றனர்.

முத்தால் வனைந்த மோஹன மண்டபத்தில் ராணி வைரம் வைத்திழைத்த சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தாள். அவள் கையில் பொற்கோலொன்று விளங்கியது. அவளது உடைகள் மாசற்று ஒரே வெண்மையா யிருந்தன. ஈரின் கருத்தை யறிந்த ராணி 'நினைவுத் தேவனை'க் கூப்பிட்டாள்.

'நினைவுத் தேவன்' ஒரு குடுகுடுக் கிழவன், மிகவும் தளர்ந்துபோன

தோற்றம். அவன் வதனத்தில் துன்பமும் இன்பமும் மாய்ந்தும் தோன்றியும் விளங்கிக்கொண்டிருந்தன.

“அடா நினைவே! இறந்த லோகத்திற்கு ஈரினை அழைத்துச் சென்று ‘போன நாட்களை’க் காண்பித்து வா!” என்று கட்டளையிட்டாள் ராணி.

அவர்கள் அனைவரும் மற்றொரு அழகிய மஹாலுக்குச் சென்றனர்.

அங்கே ஒரே வெண்பனிப் படலம். அதில் ஆங்காங்கே பல தெளிவற்ற உருவங்கள் தேங்கின. கோடியில் பெரிய வெண்பனிச் சுவரொன்று இருந்தது.

“போன நாட்களே! ஒழுங்குடன் வாருங்கள்” என்று கட்டளையிட்டான் நினைவுத்தேவன்”.

ரம்மியமான யுவதிகள் பலர் வரிசையாக ஈரின் முன் தோன்றினர். அவர்களது சிரங்களில் கமலங்கள் மிளிர்ந்தன.

“ஆஹா! இவர்கள் தானே என்னுடைய ‘போன நாட்கள்?” என்றாள் ஈரின்.

“ஆம்! உன்னுடையவைகளைத் தவிர வேறு யாருடைய நாட்களையும் நீ காண முடியாது” என்று பதிலளித்தான் ‘தேவன்’.

“ஆ-ஹா! எனது ‘போன நாட்களே! எவ்வளவு அழகு வாய்ந்தவர்களாய் இருக்கிறீர்கள்? எவ்வளவு ஆனந்தமா யிருக்கின்றீர்கள்?”

“ஆம்! நாங்களெல்லாம் உல்லாஸத்துடன்தா னிருக்கிறோம். நாங்கள் துயரப்பட வேண்டிய பிரமேயமேயில்லை. நாங்களெல்லாம் உனது குழந்தைப் பருவத்தின் ‘போன நாட்கள்’ என்று அவைகளிற் சில சொல்லி மறைந்தன. உடனே இன்னும் சில சுந்தர உருவங்கள் அங்குத் தோன்றின. அவைகளிற் சிலவற்றின் கரங்களில் மலர் மாலைகள் தொங்கிக்கொண்டிருந்தன. சில உருவங்கள் துக்கத்தோடிருந்தன. சில இன்பத்தோடிருந்தன.

“என்ன கோமளமான மலர்கள்?” என்று சொல்லிய வண்ணமே ஈரின் ஓர் மாலையை எடுத்தாள். “ஹா! இவைகளில் ஓர் முள்ளிருக்கின்றதே! என்னைக் குத்திவிட்டதே! நீங்கள் ஏன் இதை எனக்கு முன்னமேயே சொல்லியிருக்கக்கூடாது?”

“அந்த நாளில் நீ சந்தோஷமாகத்தானிருந்தாய். ஆனால் உனது இன்பங்கள் எல்லாம் சுயநலமுடையன. அவைகள் என்னைத் தைத்துவிட்டன. ஆகையால் நான் எப்போதும் எனது மலர்களில் முட்களை எடுத்துப்போக வேண்டியவளா யிருக்கிறேன்” என்றது ‘போன நாள்.’

“நீ எதற்காக சிடுசிடுத்த முகத்துடனிருக்கிறாய்?” என்று மற்றொரு ‘போன நாளை’ நோக்கிக் கேட்டாள் ஈரின்.

“அப்போது நீ எப்போதும் சிடுசிடுத்த முகத்துடனிருந்தாய். ஆதலின் நானும் எப்போதும் இம்மாதிரி இருக்க வேண்டியதாயிற்று” என்று பதில் வந்தது.

ஈரின் உள்ளம் நடுங்கியது.

“போன நாளே! என் கண்ணே! என் அருகில் வா!” என்று இன்னொரு உருவத்தைக் கூப்பிட்டாள் ஈரின்.

“நான் வரமாட்டேன். அப்போது நீ விஷமியாக இருந்தாய். உன் காற்றாடி நூலை உன் தம்பி ஒளித்து வைத்துவிட்டானென்று நீ அவனை அடித்தாய். ஆகவே நான் எப்படி உன்னிடம் வருவது என்றது?” ‘அந்த நாள்’.

“ஐயோ, போன நாட்களே! என் கண்மணிகளே! உங்களுக்காக நான் வருந்துகிறேன்” என்று சொல்லியவாறே ஈரின் விம்மியழத் தொடங்கிவிட்டாள்.

“இதோ பார்! இதோ பார்!! உள்வலி யிழந்து உள்ளம் தளர்வடையாதே” என்றான் நினைவுத் தேவன்.

அவளும் பார்த்தாள். ஆ! ஆ!! மஹா சௌந்தர்யமான ‘போன நாள்’ அவள் முகத்தில் புதுச்சோதி மின்னியது. அதரங்களில் புன்னகை பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. அவள் உடலெங்கும் மலர் மணம் வீசியது.

“ஈரின்! நீ மிகவும் நல்ல பெண்ணாக இருந்தாய். ஓய்ந்து போன உன் தாய்க்கு உதவிசெய்ய ஓடினாய். குழந்தையைத் தொட்டிலிலிட்டு தூங்க வைத்தாய். அது விழித்துக்கொண்ட போதெல்லாம் குறும்புகள் பேசி அதைச் சிரிக்க வைத்தாய். நீ அன்று எல்லாருக்கும் உதவிசெய்ய முயன்றாய். ஆகையால்தான் நான் என்றும் மகிழ்ச்சியுடனிருக்கிறேன்” என்றது அந்தப் ‘போன நாள்.’

அப்போது வேறொரு ‘போன நாள்’ கறுப்புடை யணிந்துகொண்டு அவள் முன் கிளம்பியது. துயரம் நிறைந்த அதன் முகத்தில் இனிமை மட்டும் மாறவில்லை. அது ஈரினைத் தனது கரங்களால் கழுவி, “ஈரின்! நீ அன்று துக்கத்தி லாழ்ந்திருந்தாய். ஏனெனில் உன் தந்தை அன்று இறந்த தினம். ஆனால் உன் மனம் ஒடிந்துபோகவில்லை. மஹத்தான அந்த துயரத்தை எதிர்த்து மன வலிமையுடனிருக்க முயன்றாய். நைந்துபோன உன் தாய்க்கும், சகோதர சகோதரிகளுக்கும் ஆறுதல் மொழிகள் கூறி தேற்றினாய். பிறர்க்கு உதவி செய்து உனது ‘துயரத்தை மறக்க முயன்றாய்” என்றது.

“ஆம்! நீ மிகவும் துக்கமுடையவளே! ஆனால் மற்றெல்லாரையும் விட நீ தான் மிகவும் சிறந்தவள்” என்றாள் ஈரின்.

“தேவனே! பார்த்தது போதுமென்று நினைக்கிறேன். எனது அசங்கியமான ‘போன நாட்களை’க் குறித்து நான் வருந்துகிறேன்” என்றாள் ஈரின்.

“போன நாட்கள்! இறந்த காலம்! அதை நினைப்பதால் பயனில்லை. அதோ, அந்த வெண்பனிச் சுவற்றிற்கப்புறம் புத்தொளி கொண்ட ‘புது நாட்கள்’ இருக்கின்றன. இல்லை, இப்போது உன்னால் அவைகளைக் காண முடியாது. ஆனால் இனி வரப்போகும் ஒவ்வொரு ‘புதுநாளை’யும் புகழுள்ள நாளாக்க முயற்சி செய். புன்மை தீரப் புது நாளில் பெருஞ் செயலாற்று. எல்லாருக்கும் நன்மையே செய், எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்த பின்பே நீ உறங்க வேண்டும். துயிலிலிலும், விழிப்பிலும், களைப்பிலும் பிறர்க்குதவி செய்தலே உன் கருத்தாயிருக்க வேண்டும். அதுதான் உனது வாழ்க்கையின் லட்சியம். உன் ஹிருதயத்தில் உயர்ந்த நினைவுகளும், செயல்களுமே நிறைந்திருக்க வேண்டும். குள்ள நினைப்புகளையும், குத்திர புத்தியையும் நீ கொன்று விடு. அப்போது நீ ‘போன நாட்களை’க் குறித்து வருந்த வேண்டியதில்லை” என்றான் நினைவுத் தேவன்.

மறு நிமிடம் ஈரின் துள்ளியெழுந்தாள். சாளரத்தின் வழியாக சூரியக் கிரணங்கள் நுழைந்து அவளை நோக்கிச் சிரித்துக் கொண்டிருந்தன. “ஓ! ஹோ! புது நாள் வந்து விட்டது. இதை புகழுள்ள நாளாகச் செய்யவேண்டும்” என்று சொல்லிக் கொண்டே படுக்கையினின்றும் எழுந்து ஓடினாள் ஈரின்.

மானத்தைக் கெடுக்கும் ஜீவன்கள்

(ஆயில்யம் எழுதியது)

பார்த்தாலும் பார்த்தேன், இந்தக் குழந்தைகளைப் போல நம்மை ஏமாற்றும் ஜீவன்களை நான் பார்த்ததேயில்லை. ஏமாற்றுவது மட்டுமல்ல நம்மைப் பொய்யர்களாகவும் ஆக்கிவிடுகின்றன. சில சமயங்களில் நமது மானத்தை தப்பிடிக்குச் சில்லரை மாற்றி விற்று விடுகின்றன.

"நம்ம செல்லத்தின் கைக்குழந்தை இருக்கு இல்லையோ—(இருக்கு என்பது நிச்சயம்தான்) அது என்ன சமத்து! என்ன சமத்து! வேற்று முகமே கிடையாது. அழறதே கிடையாது. தேமேன்னு விளையாடிக் கொண்டு கிடக்கிறது" என்று முதல் நாள்தான் அத்தையிடம் சொல்லி விட்டு வருகிறோம். அத்தை அரைப் பவுண்டு பப்பர்மிண்டை வாங்கிக் கொண்டு குழந்தையைப் பார்ப்பதற்கு நம் வீட்டிற்கு வருகிறாள். அப்போதுதான் சமயம் பார்த்து இந்தப் போக்கிரிக் குழந்தை 'ஞொய்' என்று அழுது கொண்டிருக்கிறது. பிடிகொடாமல் கத்துகிறது. வந்த அத்தை பிரியத்தோடு கையை நீட்டுகிறாள். சனியன் அவளிடம் போகமாட்டேனென்கிறது. முதனாள் நாம் சொல்லி விட்டு வந்த அத்தனையும் பொய் யென்று பண்ணிவிடுகிறது. "இப்படி விடாமல் அழற குழந்தையை நான் பார்த்ததே யில்லையம்மா!" என்று வந்த அத்தை சர்ட்டிபிகேட்டும் கொடுத்து விடுகிறாள். அவள் போனாளோ இல்லையோ—(கட்டாயம் போய்விட்டாள்) உடனே இந்தவாண்டு அழுகையை நிறுத்திவிடுகிறது.

ஜானகியின் மூன்று வயதுக் குழந்தை யிருக்கிறதே அது நல்ல சமத்தாய்த்தானிருந்தது. யாராவது பாடினால் உடனே வெகு அழகாகத் தாளம் போடும்; கூத்தாடும்; சிரிக்கும். ஊரிலிருந்து எல்லோரும் விருந்துக்கு வந்திருக்கிறார்கள். நமது குழந்தையின் பிரதாபத்தை நாமும் முன்னால் சொல்லி வைக்கிறோம். எல்லோரும் சுற்றி உட்கார்ந்து கொள்கிறார்கள். "பாப்பா நான் பாடறேன். எங்கே தாளம் போடு பாக்கலாம்!" என்று நோட்டீஸ்கொடுத்துவிட்டு, "ஸ்ரீ ராமசந்திரனே ஸ்ரீ லோல சுந்திரனே" என்று பாட்டை ஆரம்பிக்கிறோம். பல்லவியைப் பத்து தரம் திருப்பியாயிற்று. அநுபல்லவியுமாயிற்று. இத்தனை பேருடைய ஆவல்க் கண்களிலும் மண்ணை வாரிப் போட்டு விட்டது. இந்த மந்தி! தொண்டை வற்றும்படி பாடியதுதான் மிச்சம். "இப்போது அதுக்கு மனவில்லை போலிருக்கிறது" என்று சமாதானம் சொல்லும்போது நம் மூஞ்சியில் கொஞ்சம் அசடு வழியத்தான் வழிகிறது. கொஞ்சங்கூடக் கவலையின்றி பாப்பா அந்த சாகலேட்டைச் சுவைப்பதிலேயே லயித்துப் போய்க் கிடக்கிறது. உள்ளே தூக்கிக்கொண்டு போய் அந்தச் சாக்கலேட்டையும் பிடுங்கி எறிந்து நாலு அறை வைக்கலாமா வென்று அத்தனை ஆத்திரம் நமக்கு வருகிறது.

"நம்ம மணி ரொம்ப கெட்டிக்காரப் பயல்! வயது எட்டுகூட நிரம்பவில்லை. பிற மனுஷாள் என்ன கொடுத்தாலும் வாங்கிக்கொள்ள மாட்டான். கையில் கொண்டு வந்திருப்பதை வேண்டுமானால் நீங்கள் கொடுத்துப் பாருங்களேன்!" என்று ஒரு தகப்பனார் என்னிடம் கூறினார். நான் அவர் வீட்டுக்குள் நுழைந்தபோது அதே பயல் "மாமா! காலணா கொடுங்கோ! அப்பா எங்கே போயிருக்கிறாருன்னு அப்போதான் சொல்வேன்" என்று சொன்னதையும் நான் வேறு விதியின்றி காலணாவை அவனிடம் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்ததையும் அவரிடம் சொல்வதா வேண்டாமா வென்று சந்தேகம் ஏற்பட்டது. குழந்தைகளின் சமத்து மட்டுமன்று அதன் யோக்யதைகளைப் பற்றியும் குணதிசயங்களையும் ஒரு நிச்சயமாகச் சொல்வதற்கில்லை யென்பதற்கு இந்த மணிப்பயலே உதாரணம்.

நம்ம பையனை ஒரேயடியாக இரண்டாவது பாரத்திலேயே சேர்த்துவிட வேண்டு மென்பது நமது ஆசை. பள்ளிக்கூட ஹெட்மாஸ்டரிடம், "உங்களுக் கென்ன ஸார்! வேணுமானா அவனைப் பரீட்சை பண்ணிப் பாருங்கள்! மாதம் பதினைஞ்சு பதினைஞ்சு ரூபா கொடுத்து டியூஷன் சொல்லி வைத்திருக்கோம் ஸார்! அந்தக் கிளாஸுக்குத் தக்கபடி இருந்தால் சேர்த்துக் கொள்ளுங்கோ ஸார், இல்லாவிட்டால் வேண்டாம் ஸார். பரீட்சைப் பண்ணிப் பாருங்கோ!" என்று சவால் போடுகின்றோம். உடனே அவர் கனைத்துக்கொண்டு பையனைக் கூப்பிடுகின்றார். ஓர் மனக் கணக்கு போடுகிறார்.

"நாலுபேர் சேர்ந்து ஒரு காரியத்தை எட்டு நாளில் செய்கிறார்கள். ஒருவன் மட்டும் வேலை செய்தால் எத்தனை நாளில் முடிப்பான்?" என்று கேட்கின்றார்.

பையன் தலையை ஒரு தரம் நன்றாய்ச் சொறிந்து கொடுத்துவிட்டு,

"இரண்டு நாளில் செய்வான்" என்று பதில் சொல்கின்றான்.

அந்த ஹெட்மாஸ்டர் கொஞ்சமாவது முகத்தில் மாறுதல் செய்து கொள்ளாமல் "எப்படிப் போட்டாய்?" என்று கேட்கிறார். "நாலை எட்டாலே வகுத்தேன் சார்!" என்று வேறொரு சமத்தான பதிலைப் பையன் தருகின்றான். நாம் பதினைந்துப் பதினைந்து ரூபாய்க் கொடுத்து டியூஷன் சொல்லிக் கொடுத்ததாகச் சொன்னோமே அது பொய்யா? அல்லது அந்த டியூட்டர் இப்படித்தான் சொல்லிக் கொடுத்தானா. என்ன எழவோ! பையனுக்கு இரண்டாம் பாரமுமில்லை. நமது மானமும் அங்கே எகிறிப்போய் விட்டது. வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன், எவ்வளவு பெரிய கணக்கைப் போட்டாலும் நறுக்கு நறுக்கென்று பதில் சொல்கிறான் அதே பையன்.

இனி இந்தச் சிறுவர்களைப்பற்றியோ, குழந்தைகளைப் பற்றியோ ஒரு வார்த்தைகூடப் புகழ்ச்சியாகச் சொல்லக்கூடாது என்ற தீர்மானத்துக்கே வரவேண்டியிருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானம் வெகு நேரம் நீடித்திருக்கமாட்டே னென்கிறதே என்ன செய்வது! குழந்தையின் முல்லைச் சிரிப்பை ஒரு தரம் பார்த்துவிட்டோமானால் அதன்மீது கொண்டிருந்த கோபமெல்லாம் ஓடிவிடுகிறது. அடுத்த மூன்றாவது மனிதனிடம் நமது குழந்தையின் பிரதாபத்தை எடுத்துச் சொல்ல நாம் தவறுவதே யில்லை. இது என்ன விபரீதம்!

புது வருஷப் பஞ்சாங்கம் (குசேலன் படிக்கின்ருன்.)

முன்னுரை

அப்பாடா! இன்றோடே ஒரு வழியாக ஸ்ரீமுக வருஷம் காலாவதியாகி விட்டது. பவ வருஷம் தோன்றி இருக்கிறது. வருஷப் பிறப்பன்று பஞ்சாங்கம் படித்துப் பானக பூஜை நடத்துவது நமது தேச சம்பிரதாயம். சர்க்கரைக்கு அதிகவரி போடப்பட்டிருக்கிறதால் நான் வெல்லத் தண்ணி பகிஷ்காரத்தில் இறங்கி யிருக்கிறேன். ஆகவே பானகம் தரமாட்டேன். தண்ணீரில் மோர் விடுவதா அல்லது மோரில் தண்ணீர் விடுவதா தெரியவில்லை. நீர்மோர் என்கின்ருர் சிலர். மோர் தீர்த்தம் என்கின்றனர் சிலர். இந்த வாக்குவாதம் தீர்ந்து பஞ்சாயத்தான் பிறகுதான் நீர்மோர் வழங்குவதாக உத்தேசம். மின்சார விசிறி சுற்றுகின்ற இந்த தேசத்தில் ஓலை விசிறி வாங்கிக்கொள்வது அநாகரிகம் என்று நினைப்பீர்களோ வென்று விசிறிகள் வாங்கி வைக்கவில்லை. ஆனல் இன்றைக்குப் புது வருஷப் பஞ்சாங்கம் மட்டும் படிப்பதாக உத்தேசம். அறுத்துத் தந்துவிடாமல் காதுகளைக் கொடுங்கள்!

வருஷ பலன்

பவ வருடந்தோன்றிப் பரிவார மோங்கும்
தவ மிகுதியாகுந் தலத்தில்—நவமதிகம்
பெய்யுமழை தானதிகம் பிள்ளைபெறும்
மாதர்தாம்
ஐயமடிவாரறி.

இப்படி ஒரு பாட்டு ஒவ்வொரு பஞ்சாங்கத்திலும் இருப்பதைப் பார்ப்பீர்கள். இடைக்காட்டு சித்தர் இதைப் பாடிச் சென்றதாகச் சொல்வார்கள். இந்தப் பாட்டுக்கு நமது வியாக்யானம் பின்வருமாறு:—

"பவ வருடந்தோன்றிப் பரி வாரமோங்கும்" 'பரி' என்ருல் குதிரை என்று அர்த்தம். 'வாரம்' என்ருல் வரி அல்லது தட்சிணை. ஆகவே இந்த வருடத்தில் குதிரைப் பந்தயத்தில் கட்டுகின்ற பணம் அதிகமாகவே இருக்கும் என்பது பொருள்.

"தவ மிகுதியாகுந் தலத்தில்"

எங்கெங்கு ஸ்தலங்கள் இருக்கின்றனவோ அங்கே போனதுபோக இன்னும் கொஞ்சங் கொஞ்சம் தவம் மிச்சமாயிருக்குமென்று பாடி யிருக்கின்ருர் கவி. அடுத்தாற்போல 'யுவா' வந்துவிட்டால் அந்தத் தவமும் பைஸலாகிவிடும். "நவமதிகம்" என்ருல் நவ நாகரிகம் இன்னு மதிகப்படும் என்பது பொருள். பெண்கள்கூட சார்லி மீசை வைத்துக்கொள்வார்களென்று பயப்பட்டுவிடாதீர்கள்!

"பெய்யு மழைதான்" என்கிருர் புலவர். கட்டாயம் மழை பெய்யத்தான் பெய்யும். மழை பாயாது, சரியாது.

பவ வருஷத்தில் எங்கே மழையே பெய்யாதிருந்து விடுமோ என்று பயந்து கொண்டிருந்தோ மல்லவா? 'மழை பெய்யும்!' என்று சொல்வதால் ஒரு தூற்றலையாவது பார்த்துக் களிப்படையலாம்.

"அதிகம் பிள்ளைபெறுவர் மாதர்தாம்." நல்லவேளை! புருஷர்களுக்கு இல்லையே இந்தக் கோளாறு! அதுவரையில் க்ஷேமம்.

தெரிகிறதா? என்னதான் கர்ப்பத் தடைப் பிரசாரம் செய்தாலும் எவ்வளவுதான் கருவிகளை விற்ருலும் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டே யிருப்பார்களாம்! பஞ்சாங்கத்திலல்லவா எழுதி யிருக்கிறது. இதை நம்பாமலென்ன செய்வது?

"ஐயமடி War அறி."

இந்த வருடம் உலகில் யுத்தம் வருவது சந்தேகம்தான் என்று பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்கிருர் ஒருவர். தாது வருஷத்துப் பஞ்சத்துக்குப் பயந்து கொண்டு இப்போதே சிலர் 'மடிவார்' என்று ஒருவர் அர்த்தம் சொல்கின்ருர். அதுவும் சரியென்றே தோன்றுகிறது.

மகரசங்கிராந்தி பலன்

அடுத்தாற்போல மகர சங்கிராந்தி பலனைப் பார்ப்போமா?

"ஸ்திரீ புருஷ ரூபமாய் 2 முகமும் நீண்ட காதும், 2 காலும், செம்பட்டை மயிரும் விகாரமான கருப்பு சரீரத்துடன்........மிருத்திகா ஜலத்தில் ஸ்னனம் செய்து........ கழுதையின்மீது ஆரோகணித்து........" என்று இந்த வருடப் பஞ்சாங்கத்தில் வருணனை

செய்திருக்கிறதைப் பார்ப்பீர்கள். ஆனால் அதில் 'இராகினி முகத்துடனும்' என்று ஓரிடத்தில் வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. இராகினி தேவி என்ற நாட்டிய மாது பஞ்சாங்கம் பிரசுரிப்பவர்கள்மீது மானநஷ்ட வழக்கு தொடராதிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கிறேன். பஞ்சாங்கத்திலுள்ள வர்ணனை நவ உலகத்துக்குப் பொருத்தமா யில்லாததால் கொஞ்சம் மாற்றி அமைத்திருக்கிறேன். இங்குள்ள படத்தைக் கவனிக்கவும்.

"இரண்டு முகமுடையவளாய், கெரோஸின் ஆயிலில் ஸ்னனம் செய்து தங்கப் பாத்திரத்தில் சாப்பிட்டு நவீன ஆயுதங்களைக் கரத்திலேந்தி கழுதையின்மீது ஆரோகணித்து சங்காராந்தி தேவி பிரவேசிப்பாள்" என்றிருந்ததால் வெகு பொருத்தமல்லவா?

இவைகளின் பலன்கள்

கெரோஸினாயிலில் ஸ்னனம் செய்வதால் மண்ணெண்ணெய்த் தொழிலில் போட்டி ஏற்படும். தங்கப் பாத்திரத்தில் சாப்பிடுவதால் இன்னும் பல கோடி தங்கம் இந்தியாவை விட்டு நகரும். நவீன ஆயுதங்கள் தரிப்பதால் உலகில் ஆயுதப் பரிகரண இயக்கம் தோற்கு மென்று அர்த்தம். வீணை வாத்தியத்தை முறித்துச் செல்வதால் டாக்கிகளிலும், ரேடியோக் களிலும், ஒட்டல் கிராமபோன்களிலும் சங்கீதம் கொலை செய்யப்படு மென்பதைக் கண் கூடாகப் பார்க்கலாம். கழுதை வாகன மேறுவதால் "காரிக் கழுதை மேலே!" என்று எந்தப் பாட்டிலாவது வரிகளிருந்தால் அந்தப் பாட்டைப் பற்றி வாதம் பலமாயிருக்குமென்று தோன்றுகிறது. "வண்ணான் வந்தானே!" என்ற ஒரு பாட்டில் அப்படி ஒரு வரி இருப்பதாக ஞாபகம். இந்தத் தேவி யாருடைய பெயர் 'கோரா,' என்று பஞ்சாங்கம் சொல்கின்றது. 'கோரா' என்று ரவீந்திரர் ஒரு புத்தகம் எழுதியிருக்கின்றார். அந்தக் 'கோரா' அல்லவென்று நாம் வைத்துக் கொள்ள வேண்டுமேல்லவா?

இதர பலன்கள்

(இராஜா சுக்கிரன் பலன்)

கடலில் நிறைய உப்பு விளையும். ஆனால் ஒருவரும் தொடக் கூடாது. நிலமில்லா இடங்களில் தாராளமாக மழை பெய்யும். நீதி ஸ்தலங்களில் வழக்காடுவதற்கு ஜனங்கள் விரைய மாட்டார்கள். ஸ்டாம்பு பீஸுக்குப் பணம் வேண்டாமா?

(அர்க்காதிபதி குரு பலன்)

மனிதர்கள் சுகத்தை விரும்புவார்கள். ஆனால் கிடைக்காது. தான்ய விலை ஜப்பு! பட்டு பீதாம்பரம், ரத்தினம் இவைகளின் விலை சரசமாகும். ஆனால் வாங்குவதற்குக் காசு மட்டும் எந்தச் செடியிலும் விளையாது.

(ஸஸ்யாதிபதி சந்திரன் பலன்)

நதிப் பிரவாக விருத்தி. காடாம்பரமும் செழிக்கும். நதி பிரவாகத்தினால் சேதமுண்டா என்பது அனுபவத்தால் அறியலாம்.

(இரஸாதிபதி புதன் பலன்)

புட்டிப் பால், டப்பி வெண்ணெ, மார்கோ நெய், ஷாம்பெயின், தேயிலை, கஞ்சா, கள், காப்பி, அத்தர், அபின், இவைகளால் பூமி அலங்கரிக்கப் பட்டு சரச விலையாக விற்கும்.

(பஞ்சாங்கத்தைப் பாருங்கள். நான் பொய் சொல்லவில்லை.)

(தான்யாதிபதி சனி பலன்)

ஓட்ஸ், பீட்ரூட், காரட்ஸ் இவை இறக்குமதி யாகலாம். ஜோதிடம், வைத்தியம், புராணம் இவைகள் அபிவிர்த்தியாகும்.

கவனியுங்கள். நான் கூட இன்றைக்கிருந்து ஒரு ஜோஸ்யனாகி விட்டேன். தேசத்தில் வைத்தியத்துக்கு அபிவிர்த்தியென்று பஞ்சாங்கம் சொல்வதால் வியாதிகளெப்படி யிருக்கு மென்பது மறை பொருளாக தெரிகிறது. புராண சிரவணம் அபிவிர்த்தி யென்றால் பொழுது போவது அவ்வளவு கஷ்டமா யிருக்கும் என்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் தீரவும் தீராது என்று கொள்ளவேண்டும் போலும். லேடி பாகவதர்கள் அதிக மாவார்களா வென்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடாதது கவனிக்கத்தக்கது.

[சனி பலனோடு நிறுத்திக் கொள்கின்றேன். இதர பலன்களை எல்லாம் எழுதி வைத்திருக் கின்றேன். யார் நூறு ரூபாய் தருகிறார்களோ அவர்களுக்குத் தான் முழுக் கையெழுத்துப் பிரதியையும் விற்பதாக உத்தேசம்.]

கடைசியாகக் கந்தாய பலனை மட்டும் கூறி எனது பஞ்சாங்கத்தை முடித்துக் கொள்கின்றேன்.

கந்தாய பலன்

கந்தாய மென்றால் சுக க்ஷேமத்தைக் கொடுக்கும் ஆயமென்று அர்த்தம். ஆயமென்றால் டோல்கேட்டுப் பணம் என்று அர்த்தம் சொல்வது முண்டு. முதல் சுன்னமிருந்தால் ஆதியில் 4 மாதம் வரை வியாதி. 2-வது சுன்னமிருந்தால் மத்திய நாலு மாதம் சொத்தை. 3-வது சுன்ன மிருந்தால் நிஷ்பலம் மூன்றிலும் சுன்னங்களாக வருமேயானால் அசௌகரிய பலன் என்றிவ்வாறாக அறியவும்.

கந்தாயங்கள்

	முதல்	இரண்டு	மூன்று
'வெள்ளைக்கடுதாசி' பிறந்த நட்சத்திரப் படிக்கு..............	0	0	0
வருப்புப் பிரச்னைத் திட்டம் பிறந்த நட்சத்திரத்துக்கு.........	0	0	0
காக்கை பிடிக்கும் இந்தியனின் நட்சத்திரப்படிக்கு........	2	2	0
என் வீட்டில் பிறந்துள்ள நாயின் நட்சத்திரத்துக்கு.,.......	7	7	7

இப்படியாகக் கந்தாயபலன் எல்லாவற்றிற்கும் சொல்லலாம். உங்களோடு பேசிக்கொண்டிருந்தால் அடுத்த தெருவில் பானக பூஜை வீணாய்ப் போகிறது. ஸோடாகூடத் தருகிறார்களாம்! வேப்பம் பூப் பச்சிடியையும் வருஷப் பிறப்பு விருந்தையும் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டவர்களெல்லாரும் என்னோடு வாருங்கள். வருகிறீர்களா?

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

புனர் ஜன்மம்

(ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எழுதியது)

மதுரையிலே ஒரு சாஸ்திரியார் நேற்று மாலை இறந்து போனதாக வைத்துக்கொள்வோம். அவர் திரும்பவும் பிறப்பாரா? தெரு வழியாக ஒருவன் நடந்து போகும்போது காலிலே ஒரு சிற்றெறும்பு மிதிபட்டு இறந்து போவதாக வைத்துக் கொள்ளலாம். அது திரும்பவும் பிறக்குமா? இதையெல்லாம் பற்றி சாஸ்திரங்கள் மிகவும் விஸ்தாரமாகப் பேசி யிருக்கின்றன. அவற்றிலே பார்த்துக்கொள்ளலாம். ஆனால் இப்போது சொல்லவந்த விஷயம் ஹிந்துஸ்தானத்தின் புனர் ஜன்மம்.

“இந்து ஸ்தானம்” என்பது இந்துக்களுடைய ஸ்தானம். இது நமது தேசத்துக்கும், தேசத்திலுள்ள ஜனக் கூட்டத்துக்கும் பெயர். இந்த ஜனக் கூட்டத்திற்கு “பாரத-ஜாதி” என்றும் சொல்வதுண்டு.

பாரத ஜாதி

பாரதம்-பரதன் நிலை நாட்டியது. இந்த பரதன் துஷ்யந்த ராஜாவின் மகன். இமயமலை முதல் கன்யாகுமரி வரையிலுள்ள நமது நாட்டை அவன் ஒன்று சேர்த்து அதன் மிசை முதலாவது சக்ராதிபத்யம் ஏற்படுத்தியபடியால், இந்த நாட்டிற்கு பாரததேசம் என்று பெயர் உண்டாயிற்று, கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரத தேசத்திலே வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர். கிறிஸ்தவர்களாயினும், பார்ஸிகளாயினும், மகமதியராயினும், எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரதத்திலேயே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதியிலேயே சேர்த்துக்கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி, பிரிக்கப்படாதது. அழிவில்லாதது. இதற்கு ஆகாரமும் மூலபலமுமாவது யாதெனில் ஆரிய ஸம்பத்து. அதாவது ஆரியரின் அறிவும்; அந்த அறிவின் பயன்களும்.

ஆரிய சம்பத்து (ஆரியச் செல்வம்.)

‘ஸம்பத்து’ என்பது ஸம்ஸ்கிருதச் சொல். இதன் பொருள் செல்வம். ஆனால் இங்கே செல்வம் என்பது திரவியத்தையும், பூஸ்திதியையும் ஆடு மாடுகளையும் மாத்திரமே குறிப்பிடுவதன்று. அறிவுச் செல்வம், ஒழுக்கச் செல்வம், பொருட் செல்வம், ஆகிய மூன்றையும் குறிப்பிடும்.

“ஆர்ய-ஸம்பத்து” என்பது இந்துக்களுடைய அறிவு வளர்ச்சி.

நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள் இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆர்ய-சம்பத்து.

காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸிதாஸர் செய்திருக்கும் ராமாயணம் கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி இவை அனைத்திற்கும் பொதுப் பெயராவது ‘ஆர்ய-ஸம்பத்து.’ தஞ்சாவூர்க் கோயில், திருமலை நாயக்கன் மஹால், தியாகையிலுள்ள குகைக் கோயில்கள், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல் இவை அத்தனைக்கும் பொதுப் பெயர் ஆர்ய ஸம்பத்து. எனவே, ஆர்ய ஸம்பத்தாவது, ஹிந்திஸ்தானத்தின் நாகரிகம். இந்த ஸம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடங் கொடுத்தால், இந்த ஜாதியைச் செல்லரித்து விடும். இந்த ஆர்ய ஸம்பத்தை உலகமுள்ள வரை ஸம்ரக்ஷணை செய்து, மேன் மேலும் ஒளியும் சிறப்பும் உண்டாகும்படி செய்யும் கடமை தேவர்களால் பாரத ஜாதிக்கு ஏற்படுத்தப் பட்ட கடமை யாகும்.

இடையில் நமக்கு நேர்ந்த கேடு.

இந்த ஆர்ய ஸம்பத்தை நாம் பல பல நூற்றாண்டுகளாக ஆதரித்துக் கொண்டு வந்தோம். சென்ற சில நூற்றாண்டுகளாக இதில் துருப் பிடிக்க இடங் கொடுத்துவிட்டோம். தேவர்கள் நமக்குக் கொடுத்த கடமையைக் கர்வத்தாலும், சோம்பலாலும், ‘சிறுமையாலும், உல்லங்கனம் செய்யத் தொடங்கினோம். தேவர்கள் “இந்த பாரத ஜாதியைக் கொஞ்சம் செல்லரிக்கக் கடவது” என்று ஆசீர்வாதம் பண்ணினார்கள்.

மலைப் பாம்புக் கதை கேட்டிருக்கிறீர்களல்லவா? அதன் வாலிலே தீப் பற்றி யெரியுமாம். மலைப் பாம்பு கசமாசக் குறட்டை விட்டுத் தூங்குமாம். செல்லரித்துக் கொண்டு போனது அதன் ஸ்மரணையிலே தட்டவில்லை. அத்தனை கர்வம், அத்தனை கொழுப்பு, அத்தனை சோம்பர்.

நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று. ருசி குறைந்தது. கரடு முரடான கல்லும் முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்ற லாயிற்று. கவிராயர் “கண்” என்பதைச் “சக்கு” என்ற சொல்லத் தொடங்கினார். ரஸம் குறைந்தது, சக்கை அதிகப் பட்டது. உண்மை குறைந்தது. பின்னல் திறமைகள் அதிகப் பட்டன.

“சவியுறத் தெளிந்து, தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
விரியினை வீரர் கண்டார்.”

என்று கம்ப நாடார் பாடி யிருக்கிறார் “சவி” என்பது ஒளி. இது வடச் சொல்; கம்பர் காலத்தில் அதிக வழக்கத்தி லிருந்தது போலும். ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகித் தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி மேலோர் கவிதையைப் போல் கிடந்த “கோதாவரி நதி” என்று கம்பர் வர்ணனை செய்கிறார். எனவே,

கவிதையில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்பருடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

மேலும் நெடுங் காலத்துக்கு முன்னே யெழுதப்பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற பாஷை மாறிக் கொண்டு போகிறது. பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்தந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாகப் புலவர்களும், சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண, அலௌகிக, அந்தகார நடையில் எழுதுவது தான் உயர்ந்த திறமை யென்ற தீர்மானஞ் செய்து கொண்டார்கள் !

இடைக் காலத்து ஸங்கீதம்

பாரத தேசத்து சங்கீதம் பூமியிலுள்ள எல்லா தேசத்து சங்கீதத்தைக் காட்டிலும் மேலானது. கவிதையைப் போல சங்கீதத்திலும் நவ ரஸங்களின் தொழில் இருக்கவேண்டும்...............

....

இன்னின்ன ராகங்களிலே இன்னின்ன சமயங்களில் இன்னின்ன ரஸங்கள் தோன்றப் படவேண்டுமென்ற விதிகளெல்லாம் பூர்வ காலத்து நூல்களிலே காணப் படுகின்றன. கீர்த்தனத்திலுள்ள சொற்களின் அர்த்தமும், ராகத்தின் ஒலியும், ரஸத்திலே ஒன்றுபட்டிருக்க வேண்டும். தியாகையர் காலம் வரை நமது தேசத்து சங்கீதம் ஒளியுடனிருந்தது. பிறகு அதிலும் இருள் சேரத் தொடங்கி விட்டது. பாட்டிலே ரஸச் சேர்க்கை கிடையாது. அப்படியே சேர்த்தாலும் 'சோக ரஸம்' (கருணா ரஸம்) தான் சேர்ப்பார்கள் ! மற்றவை மடிந்து போயின. பாட்டுக்கிசைந்தபடி தாளம் என்பது மாறி, தாளத்துக்கு இசைந்தபடி பாட்டாகி விட்டது. இன்பத்தைக் காட்டிலும் கணக்கே பிரதானமென்று முடிவு செய்து கொண்டார்கள். இன்பமும் கணக்கும் சேர்ந்திருக்க வேண்டும். இன்பமில்லாமல் கணக்கு மாத்திரமிருந்தால் அது பாட்டாகாது.

மறு பிறப்பு

இடைக் காலத்திலே நமக்கு நேர்ந்த கேட்டிற்கு ஸங்கீதத்தையும் கவிதையையும் திருஷ்டாந்தங் காட்டினோம். ஆனால் இந்தக் கேடு இவை யிரண்டையும் மாத்திரமே தொட்டு நிற்க வில்லை. நமது சித்திரத் தொழில், நமது சிற்பம் நமது ஜனக் கட்டு, ஜனநீதி, நமது சாஸ்திரம், தலை கால் எல்லாவற்றிலும் இந்தக் கேடு பாய்ந்து விட்டது. நோய் முற்றிப்போ யிருந்தது. பராசக்தி நல்ல வேளையில் நமக்குள் உயர்ந்த வைத்தியர் பலரை அனுப்பினாள். அவளுக்கு நம் மீது கிருபை வந்து விட்டது. எனவே பிழைத்தோம். ஆனாலும் இம்முறை பிழைத்தது புனர் ஜனமத்தின் குறிகளை எல்லாவற்றிலும் காண்கிறோம். பாரத ஜாதி புதிதாய் விட்டது. தற்காலத்திலே பூ மண்டலத்து மஹா கவிகளில், நமது ரவீந்திர நாதர் ஒருவர் என்று உலகம் ஒப்புக் கொள்கிறது. இது வரை ஐரோப்பிய பண்டிதர்கள், "இயற்கை நூல்" (ப்ரக்ருதி சாஸ்திரம்) தமது விசேஷ உடைமை யென்று கருதி வந்தார்கள். இப்போது நமது ஜகதீச சந்திர வசு அந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவரென்பதை மேல் நாட்டு வித்வான்களில் ஒப்புக் கொள்ளாதார் யாருமில்லை. தமிழ் நாட்டிலே புதிய கவிதையும் சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும். தோன்றி விட்டது. உலகம் பார்த்து வியப்படையும். செத்துப் பிழைத்தோம். ஆனால் உறுதியாக நல் வயிரம் போல பிழைத்து விட்டோம். புதிய ஜன்மம் நமக்கு மிகவும் அழகான ஜன்மமாகும்படி தேவர்கள் அருள் புரிந்திருக்கிறார்கள். அதன் பொருட்டு, அவர்களை இடைவிடாமல் வாழ்த்துகின்றோம்.

என் கட்டுரை

(பால சுப்பிரமணியன் எழுதியது)

ஐயா பத்திரிகாசிரியரே ! மூன்று தஸ்தாபேபர் ஆறணா ; தபால் பில்லை முப்பத்தாறும் ஒரு ரூபாய் இரண்டணா; ஆக மொத்தம் ஒன்றரை ரூபாய் எங்கம்மா அஞ்சறைப் பெட்டியிலிருந்து செலவழித்தாய் விட்டது. வர வர என் மேல் எல்லோரும் பலத்த சந்தேகம் கொள்கிறார்கள். தெரிஞ்சுதோ என்பாடு அனர்த்தம் தான். அல்லாமல் அஞ்சறைப் பெட்டிக்கு, என்மேல் கோபமோ என்னவோ தெரியவில்லை. கர்ணனின் பொக்கிஷப் பெட்டிமாதிரி வேண்டும்போது பணம் சுரக்கும் அந்தப் பெட்டி, தன் வேலையை நிறுத்தி விட்டது. இப்பொழுது உமக்கு எழுதுகிற கார்டு எது தெரியுமா ? அடுத்த வீட்டு ராமு புஸ்தகத்திலிருந்து கிளப்பினது. ஐயா ! சொல்லி விடாதீர். தெரிந்ததோ என்னை சட்ணியாக்கி விடுவான். போன மூன்று மாதமாக என் நண்பனிடம் என் வியாசம், கட்டுரைகளின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி வருகிறேன். ஆச்சு, இன்றைக்கு தையோடு பங்குனி மூன்று மாதமாய் விட்டது. என்னைப் பற்றியாவது என் வியாசத்தைப்பற்றியாவது ஒரு துணுக்கு கூட வரக் காணோமே ! இந்த ஒன்றரை ரூபாய் செலவழித்து என் கட்டுரையில் ஒன்றை அச்சடித்து நோட்டீஸ் மாதிரி நூறு பேருக்காவது கொடுத்திருப்பேன். அது முன்னாலேயே தெரியவில்லை. 'கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம்' செய்வதால் எதாவது பிரயோஜனம் உண்டா சொல்லும். 'முயற்சி திருவினையாக்கும்' என்று எனக்குத் தெரியும். ஆனால் உம்மிடம் நேரே கொண்டுவந்து என் கட்டுரையைக் கொடுத்து விட்டு, அம்மம்மா! அதை நீங்கள் சித்ரவதை செய்வதையும் அது படும் அவஸ்தையையும் கண்டு விட்டால் போதும்.

இவ்வளவு வண்டவாளங்களை வெளிப்படுத்தியும் என் மீது உமக்கு இரக்கமில்லையா ? என் மீது எவ்வளவு பொறாமை உமக்கு ! என் கண் குளிர என் கட்டுரை ஒன்றை உம் பத்திரிகையில் பார்ப்பதில் உமக்கென்ன நஷ்டம் ? என் நண்பர் கேலிக் கூத்தினின்று என்னைச் சிறிது தப்புவிக்கலாகாதா ? ஐயா ! நான் செலவழித்த ஒண்ணரை ரூபாயை உண்டியில் சேர்த்து வைத்திருந்தால் எவ்வளவோ காரியம் செய்வேன். இரண்டு ஷர்ட்டுகள் கதவு மாதிரி தைத்திருப்

பேன். மூர்மார்க்கெட்டில் போனால் ருசியான நாவலாக ஒரு டஜன் வாங்கியிருப்பேன். "கோமள விலாஸ் பிரபுக்கள் கூடத்"தில் (House of Lords) ஆறு தரம் வீற்றிருக்கலாம். (ஆறு தரம் பிரபுத்வம் அடைவது மேலா பத்திரிகையில் கட்டுரை வருவது மேலா பாரும்?); இன்னும் எண்ணற்கரிய எவ்வளவோ காரியங்கள் செய்திருக்கலாம். ஒருக்கால் கூட்ஸ் வண்டி மாதிரி நீளுகிறதே இந்தக் கட்டுரையும் என்று கிழிக்கப் பார்க்கிறீரோ? ஐயா கூட்ஸ் வண்டி இழுக்கிற பாரம் பிரயாணி வண்டி இழுக்கிறதா பாரும். ஒருக்கால் தங்கள் வயிற்றில் கோளாறு ஏற்பட்டபொழுது கட்டுரைகள் வந்தால், கட்டுரைகள் பயந்து பிரப்பங் கூடையில் நுழைந்து விடுகின்றனவோ என்றால் நான் முப்பத்தாறு கட்டுரைகளையும் ஒவ்வொரு சமயத்திலும் வரும்படியாகச் செய்தேனே. நானும் மனுஷ்ய ஜந்துதானே. பசியின் போக்கு எனக்குத் தெரியாதா என்ன? சரி, இந்தக் கடிதமாவது சக்தியின் அருளால் தங்கள் மனோ, வாக்குக் காயாதிகள் நிர்மலமாயிருக்கும்பொழுது தங்களைச் சேருமென்று நம்புகிறேன்.

தயவு செய்து ஒரு விளம்பர காலத்திலாவது என் கட்டுரையை பிரசுரித்து விடும். சாதாரண கட்டுரைகளுக்குரிய மரியாதையை இதற்கும் கொடுக்கக் கூடாதா? புனைப்பெயர் கினைப்பெயர் போடாதீர். நன்றாக என் முழு விலாஸத்தையும் போட்டுவிடுமே. அப்பொழுது தான் இந்த நம்பிக்கையில்லாத நண்பர்கள் என்னை நம்பக்கூடும். இதை தாங்கள் கட்டாயம் செய்வீர் என்று நம்புகிறேன்.

இதை தயவு செய்து கடைக் கண்ணால் கடாட்சிப்பீர் என்ற எண்ணம். இல்லாவிடில் தயவு செய்து பெயர் சொல்லாமல் உதவி யாசிரியரிடமாவது காண்பியும். அப்புறம் கட்டுரையின் நிலைமை உம்ம கையில்.

Have your Majestic
FIGURE
At
R. DASEN STUDIO.
The Best
AND MOST UP TO DATE STYLE & FINISH
ELECTRIC PHOTO ARTISTS
No 55 RATTAN BAZAAR ROAD MADRAS
STUDIO HOURS 8 A.M to 8 PM

ஒற்றுமையின் உயிர்நிலை

(தேசிக விநாயகம் பிள்ளை பாடியது)

1. ஒற்றுமையாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரியவேண்டாம்—இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம்.

2. கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு—ஜாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ?

3. வேதன் முகத்தி லுதித்தவரே—இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம்!
பாதமதில் வந்த பாவியரே—இந்தப்
பாரி லிழிந்த அடிமைகளாம்!

4. வாயில் விஷமுண்டு பாம்பினுக்குக்—கொட்டும்
வாலில் விஷமுண்டு தேளினுக்குத்
தாயிற் சிறந்த பிரமனுக்கும்—இரு
தாளில் விஷமுண்டோ சாற்றுவீரே.

5. உச்சி மரத்தில் சுவைக்கனியும்—தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக் கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்டதுண்டோ?

6. ஜாதி யிரண்டலால் வேறுளதோ?—ஔவைத்
தாயின் உரையும் மறந்தனிரோ?
ஆதி இறைவன் வகுத்ததுவோ?—மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ?

7. நாயனார் வந்த திருக்குலத்தை—உயர்
நந்தனார் வந்த பெருங்குலத்தை
தீய குலமெனத் தள்ளுவமேல்—அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ?

8. வேதியராலே மழை வருமேல்—வயல்
வேலை செயாது விளைந்திடுமோ?
வாதமெலாம் கட்டி வைத்திடுவோம்—ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம்.

9. வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்—கூரை
வெந்து விழுவதும் கண்டிலீரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ?

10. மானமே வாழ்வின் உயிர்நிலையாம்—அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈனஜாதி யெனும் பேச்சினைப்போல்—நெஞ்சை
ஈர்ந்திடும்வாளொன்று வேறுளதோ?

11. மன்னுயிர்க்காக முயல்பவரே—இந்த
மாநிலத்தோங்கும் குலத்தினர்கள்
தன்னுயிர் போற்றித்திரிபவரே—என்னும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா

பொருளாதாரமும் சமூக வாழ்க்கையும்

(திருச்சி கே. வீ. எஸ். வாஸ் எழுதியது)

அரசாங்கங்கள் சின்னா பின்னப்படுவதும், திடீரென பாங்குகள் முறிந்து பாழடைவதும், உயர்ந்த வியாபாரங்கள் முறிவதும், விலைகள் எதிர்பாராவண்ணம் திடீரென உயர்வதும், மறு நிமிடம் தாழ்வதும், தேசத்தின் பொருளாதாரத்தையே பொருத்திருக்கின்றதெனப் பலர் இன்னும் உணரவில்லை. மனிதனுக்கு உயிர் எவ்வளவு அருமையானதோ அவ்வளவு அருமையானது பொருளாதார ஞானம். மனிதன் உயிர் பெற்று சுகஜீவியாயிருந்தாலன்றி இதர சாஸ்திரங்கள் எவ்விதப் பிரயோஜனமுமில்லாதவை. ஆனால் பொருளாதார சாஸ்திரமோ மனிதனது உயிருக்கே இன்றியமையாததாயிருக்கின்றது. இவ்வுலகில் பணமின்றோர் பிணமாவர். செல்வமின்றேல் வாழ்க்கை அரிது. அவ்வித செல்வத்தை அளிப்பதும் அழிப்பதும் பொருளாதாரமே..

பொருளாதார சாஸ்திரத்திற்கும் விலைமாறாட்டத்திற்கும் யாது சம்பந்தமெனச் சற்று நோக்குவோம். விலைகள் உயர்வதும் தாழ்வதும் எதனால்? ஏன் ஒரு சாமானின் விலை எப்பொழுதும் ஒரே நிலையிலிருக்கக் கூடாது? நெருப்புப் பெட்டிகள் திடீரென இப்பொழுது இரட்டிப்பு விலையாய் விட்டதல்லவா? இப்படி சாமான்களின் விலை விஷயத்தில் குறும்பு செய்பவர்கள் யார் என்ற விஷயம் மிகவும் ருசிகரமானது.

இதை விளக்க இங்கு அரிசி மார்க்கெட்டை உதாரணமாக வெடுத்துக் கொள்வோம். இவ்வருஷம் அரிசி விலை மலிவு என்றால் என்ன? அதாவது இவ்வருஷம் ஒரு ரூபாய்க்கு சென்ற ஆண்டில் வாங்கியதை விட அதிக அரிசி வாங்கலாம். ஏன்? அரிசி அபரிமிதமாக மார்க்கெட்டிலிருப்பின் அதன் 'தேவை' அதாவது "டிமாண்டு" குறைந்து, விலையும் குறைகிறது. அரிசியின் மார்க்கெட் மதிப்புக் குறைவதன் காரணம் வாங்குகின்றவர்களின் நோக்கத்திலுண்டாகும் மாறுதலால் தான். வாங்குகின்றவர்களின் நோக்கம் அவர்கள் விரும்பும் சாமான் மார்க்கெட்டில் எவ்வளவிருக்கின்றதோ அதைப் பொருத்திருக்கின்றது. ஓராண்டில் நெல் அதிகமாக அறுவடையாகாமல் (அதிக மழை, காற்று முதலியவைகளாலெனக் கொள்க) குறைந்த மூட்டை அரிசியே மார்க்கெட்டில் விற்பனைக்கு வருவதாகக் கொள்வோம். பலர் அரிசியை வாங்க விரும்புகின்றனர். மார்க்கெட்டில் இருக்கும் அரிசியோ வாங்க வந்திருப்பவர்கள் சகலருடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவு இல்லை. இச்சமயம் தவறின் மறு சமயம் வாய்ப்பதரிதெனக் கண்ட வியாபாரிகள் வாங்குகிறவர்களிடமிருந்து எவ்வளவு பணம் பறிக்க வியலுமோ அவ்வளவுக்கு விலையை யுயர்த்துகின்றனர். விலை யுயர்ந்து விட்டதைக் கண்ட மிராசுதார்கள் அதிக லாபமடைய வேண்டுமென்ற விருப்பத்தால் அதிக விஸ்தீரணம் தங்கள் நிலங்களை நெல் அறுவடைக்கே உபயோகிக்கின்றனர். இங்ஙனம் பலர் லாபத்திற்குத் தூண்டப்படவே மறு ஆண்டில் நெல் அறுவடை அதிகமாக மார்க்கெட்டில் அதிகமாக அரிசி விற்பனைக்கு வருகின்றது. இந்தக் 'கொடுப்பு'க்கு ஆங்கிலத்தில் "ஸப்ளை" என்பர்.

ஆகவே ஒரு சாமானின் விலையை நிர்ணயிக்கும் கருவிகள் 'கொடுப்பும்' 'தேவையும்' என்ற இந்த இரண்டுந்தான். அரிசி போன்ற உணவுச் சாமான்களின்றி மனிதன் இவ்வுலகில் வாழ்தலெங்ஙனம்? அவ்வித சாமான்களின் விலைகளை நிர்ணயிக்கும் சாஸ்திரமே பொருளாதாரமெனப்படும். இப்பொழுது பொருளாதார சாஸ்திரம் வாழ்க்கைக்கு எவ்வளவு உபயோகமானதெனத் தெரிந்து விட்டதல்லவா?

விலை யுயர்வதும் தாழ்வதும் ஓர் சாமானின் உற்பத்தித் தொகையினாலும் வாங்குகின்றவர்களின் நோக்கத்தாலும் (விருப்பத்தாலும்) மட்டுமன்று. உதாரணமாக இப்பொழுது திடீரென நெருப்புப் பெட்டிகள் விலையுயர்ந்துவிட்ட காரணத்தை நோக்குங்கள். எதிர்பாரா வண்ணம் கவர்மெண்டார் நெருப்புக்குச்சிகள் மீது அதிக வரி போட்டுவிட்டனர். நெருப்புக்குச்சி உற்பத்தி செய்பவர்கள் ஏற்கனவே குறைந்த லாபத்திற்குச் செய்து கொண்டிருப்பதால் அவர்கள் அதிக வரிக் கொடுப்பதாயின் நஷ்டமடைய நேரிடும். எவனும் நஷ்டத்திற்கு உற்பத்தி செய்யான். ஆதலின் அவன் உற்பத்தி செய்வதையே நிறுத்த வேண்டிய நிலைமை வந்து விடுகிறது. ஆனால் நெருப்புப் பெட்டியின் விலை சிறிது அதிகமாயினும் ஜனங்கள் வாங்குவதற்குத் தயாராக விருக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு அது அவசியமாக விருக்கின்றது. ஆகவே நெருப்புப் பெட்டி உற்பத்தி செய்பவர்கள் வரியைக் கொடுத்துவிட்டு அதைத் தங்கள் லாபத்தில் கூட்டி வைத்து வியாபாரிகளுக்கு விற்கின்றனர். ஆகவே விலை கூடிவிட்டது. இவ்வித வரி

சம்பந்தமான விஷயங்களையும் விளக்குவது பொருளாதார நூலேயாகும்.

இவ்விதம் விலையில் மாறுதல்கள் தோன்றுவதற்கு மற்றோர் காரணமுமுண்டு. ரூபாயின் மதிப்புக் குறைவதாலோ அல்லது அதிகப்படுவதாலோ விலைகளில் மாறுதல்கள் உண்டாகலாம். இப்படி நாணய மதிப்பிலுண்டாகும் பேதங்களையும் எடுத்துக் காட்டுவது பொருளாதார சாஸ்திரத்திலோர் பாகமாகும். ஆகவே பொருளாதார சாஸ்திர ஞானம் எவ்வளவு முக்கியமானது என்பது தெரிகிறது.

ஒரு மிராசுதாரை உதாரணமாக கவனிப்போம். அவன் தனது நிலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு பணம் செலவு செய்து உயர்ந்த எருக்களை உபயோகித்து சரியான கலப்பையுடன் உழுது, நல்ல விதைகளை உபயோகித்து தக்க ஆட்களை வைத்துப் பயிரிடுகின்றானோ அதற்குகந்தாற்போல் அந்நிலம் அவனுக்குப் பயனை யளிக்கின்றது. ஆனால் நிலத்தில் செலவிடும் பொருள் அதிகமாக அதிகமாக நிலமும் அதிகப் பயனை யளிப்பது நிச்சயமாயின் உலகிற்கு வேண்டிய தானியங்கள் சகலத்தையும் ஒரே நிலத்தில் சாகுபடி செய்துவிடலா மன்றோ? கடவுளின் மாய வினோதக் கூற்றுகளில் இதிலுமோர் விசேஷமிருக்கிறது. நிலத்தில் செலவிடும் பொருள் எவ்வளவு அதிகப் படுகின்றதோ அதற்குத்தக்க பலனை சில காலங்கள் வரையில்தான் அளிக்கின்றது. அதற்குப்பின் நிலம் அளிக்கும் பிரதிபலன் குறைகின்றது. இதைப் பொருளாதார சாஸ்திரிகள் 'Law of Diminishing returns' என்பர். இதை விளக்கியுரைத்து சாகுபடி செய்யும் விதத்தை யறிவிக்கும் நூல் பொருளாதார சாஸ்திரமே.

ரூபாய் நோட்டுகளைக் கவனியுங்கள். அதற்கு எவ்வளவு மதிப்பிருக்கிறது. உலோகத்தால் செய்த தங்கம் வெள்ளி நாணயங்களுக்குள்ள மதிப்பு கடிதத்திற் குண்டாவானேன்? அதை உண்டாக்குகின்றவர்கள் யார்? கவர்ன்மெண்டார் அச்சிட அச்சுயந்திர சாலை தங்களிட மிருக்க அவர்களே பணமில்லையென் றழுவதின் மர்மமென்ன? ஆதலின் கவர்ன்மெண்டார் விரும்பியபடி நோட்டுகள் அச்சிட வியலாதென விளங்குகின்ற தல்லவா? அவ்விதம் அவர்களைத் தடுக்கும் முட்டுக்கட்டையாது? அவ்வித விஷயங்களை விரித்துரைக்கும் பொருளாதார சாஸ்திரம் எவ்வளவு ருசிகரமானதாக விருத்தல் வேண்டும்?

ஆகவே, பொருளாதார சாஸ்திர ஞானம் சமூக வாழ்க்கைக்கு அவசியமானது. இன்றியமையாதது. ஒவ்வொருவரும் தங்கள் நடத்தையில் பொருளாதார சாஸ்திர சட்டங்களுக்கு உட்பட்டே நடக்கின்றனர். ஆனால் அவர்கள் தாங்கள் ஓர் சட்டத்திற்கடங்கி நடக்கின்றோம் என்பதையும் அச்சட்டங்களே பொருளாதார சாஸ்திரம் என்பதையும் அறியாமலே தங்கள் வாழ் நாளைக் கடத்துகின்றனர். ஒருவன் எழுதத் தெரியாதிருப்பினும் எப்படி நன்கு பேசுகின்றானோ அதைப் போல் தாங்கள் நடப்பதும், செய்வதும் உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் பொருளாதார சாஸ்திரங்களி லடங்கியுள்ள சட்டதிட்டங்களுக் குட்பட்டே யென் றறியாவிடினும் அவர்களுள் வேலை செய்யும் ஓர்வித உணர்ச்சியால் எதையும் செய்கின்றனர். அந்த உணர்ச்சியே பொருளாதாரத்தின் முக்கியமான கருத்து. ஆதலின் சமூக வாழ்க்கையும் பொருளாதார சாஸ்திர ஞானமும் பிணைக்கப்பட் டிருக்கின்றன. பொருளாதார சாஸ்திர சட்டங்கள் வேலை செய்யாது நின்றுவிடின் அன்றே சமூகத்தின் முடிவு என்றே சொல்லிவிடலாம்.

வீரத் தாய் (செல்லம் எழுதியது)

'கண்ணே! சளி பிடிக்கும்! காற்றில் போகாதே. சொக்காய்ப் போட்டுக்கொண்டு உள்ளேயே உட்கார்ந்திரு' என்று நம் தாய் நம்மைக் கொஞ்சினாள். ஒவ்வொரு தாயும் தன் மகனை இக்காலத்தில் கொஞ்சும் முறை இதுவே. நம் தாயைப்போல நம்மிடம் அன்புடையார் உண்டா? ஈ மொய்த்தால்கூடப் பொறுக்க மாட்டாள் என்று பெருமையும் பேசுகிறோம். ஆனால் இதன் பயன் என்ன?

புலியும் பன்றியும், யானையும் சிங்கமும் எங்கும் மலிந்த ஓர் மலையின் மேல் வாழ்கின்றவள் நம் பழந் தமிழ்த் தாய். அவள் கணவனும், தந்தையும் அண்ணன்மாரும், தம்பிமாரும், யாவரும் வீரர்களாகப் போரில் சென்று மாண்டவர்கள்தான். புலிக் குட்டிகளோடு தவழ்ந்து விளையாடி வரும் தன் குழந்தையை மடிமேல் வைத்துப் பால் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

திடீரென்று போர் முரசின் இடி போன்ற ஓசை முழங்குகிறது. நம் தாயின் உடல் மயிர்கள் எல்லாம் சிலிர்க்கின்றன. இரத்தம் கொதிக்கிறது. கண்கள் சிவப்பேறுகின்றன. உதடு துடிக்கிறது. வீரமே பிறந்து வளர்ந்த குடியல்லவா அது. தன்னையே மறந்தாள். வெடுக்கென்று குழந்தையின் வாயை மார்பிலிருந்து பிடுங்கினாள். புதல்வனை இரு கைகளாலும் பிடித்து முகத்தை ஏற இறங்கப் பார்த்தாள். சட்டென்று உள்ளே சென்றாள். தன் கணவன் பகைவரைக் குத்தியதால் வளைந்த வேலொன்று உள்ளே கிடந்தது. அதைக் கையில் எடுத்து அநாயாசமாக வளைவை நிமிர்த்தினாள். தன் வீட்டு வாயிலில் எங்கும் நட்டுக் கிடந்த வீரக் கற்களை (வீரரின் ஞாபகார்த்தமாக நடப்பட்ட கற்களை) அவனுக்குக் காட்டினாள். வளைவு நிமிர்ந்த வேலை அவன் கையிலே கொடுத்தாள். 'உடனே போருக்குச் சென்று வெற்றியுடன் திரும்புவாயாக' என்று பணித்தாள். அத்தகைய தாய்மாரை இனி மேல் என்றாவது காண்போமா?

வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற வெஃகம் மிறைக்கொளீஇ— முந்தை
முதல்வர் கல் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு.

(புறப்பொருள் வெண்பா மாலை)

நோனாள்—பொறுக்க முடியாதவளாய்

வெம்மை + திறல் + எஃகம் + மிறைக் கொளீஇ—மிகுந்த பலத்தை யுடைய வேலின் வளைவை நீக்கி.

சிவாஜியின் வீர வாள்

("இந்திரமோஹன்" எழுதியது)

சில சரித்திர ஆசிரியர்களின் குறும்புக் கைகள் சிவாஜியைப்பற்றி என்னென்னமோ பொய்க் கதைகளை வரைந்து உலகிற்குத் தந்திருக்கின்றனவாயினும், பொதுவாக உலகமும், சிறப்பாக இந்தியாவும், அவரது உண்மைப் பிரதாபத்தை அறிந்து கொள்ளாமலில்லை. "மலை எலி" என சிவாஜியை மேற்படி ஆசிரியர்கள் அழைக்கலாம்; இன்னும் பற்பல விதங்களில் அவருக்குச் சாயம் பூச எத்தனித்திருக்கலாம்; இனியும் எத்தனிக்கலாம். ஆனால் இந்தியாவின் ஒப்பற்ற வீரராக விளங்கி இந்தத் தேசத்துக்கே பெருமை யூட்டிய மகாராஷ்டிர வீரசிங்கமாகிய சிவாஜி இந்திய மக்கள் ஒவ்வொருவரது உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறார் என்பதை உண்மைச் சரித்திரம் ஒப்புக்கொண்டே யாகவேண்டும். வீரரின் திரு விளக்காக அவர் திகழ்ந்தார்; இன்றும் இந்தியாவின் வீரர்கள் அவரது வீர ஊற்றையே பருகி, அவரது வீர வெள்ளத்திலேயே திளைத்திருக்கின்றனர்.

பவானியின் வீரப்பால்

சிவாஜிக்கு வலிமை யூட்டியதும், வெற்றி யளித்ததும் எது? எதிரிகளைப் போரில் புறங்காட்டி ஓடும்படி செய்தது எது? சென்ற விடமெல்லாம் அலருக்குச் சிறப்பு தந்தது எது? அவரது வீரப் பிரதாபங்களின் உயிராக விளங்கியது எது? அதுதான் பவானி தேவி அவருக்களித்த வாள். பவானி தேவி சிவாஜி மன்னரின் குல தெய்வம். எத்தகைய காரியத்தைத் தொடங்கினும், எந்தப் போரிலிறங்கினும், அவர் பவானி தேவியையே உள்ளத்தில் ஸ்மரணை செய்வார். பவானி தேவியும், அவரது மெய்யான பக்தியை மெச்சி, அவருக்கு அவ்வப்பொழுது ஆசியளித்து வந்தனள். பெரும் போர்களில் சிவாஜியின் கைகளே போர் செய்தனவாயினும், உண்மையில் பவானி தேவியே அவருக்குப் பின்னிருந்து போர்களை நடத்தினள் எனக் கூற வேண்டும். இங்ஙனமாக சிவாஜி வீரருக்கு வீரப்பா லூட்டியது பவானி அன்னையே. ஆதலால்தான் இன்றும் மகாராஷ்டிர வம்சத்தினர் ஆங்காங்கு பவானிதேவிக்குக் கோயில் சமைத்து, அவளைப் பூஜித்து, வணங்கி வருகின்றனர்.

மாலைவேளையில் மலைக்காட்சி

இப்பொழுது நாம், பவானிதேவியிடமிருந்து சிவாஜி எங்ஙனம் வீரவாளைப் பெற்றாரென்பதைக் கவனிப்போம். செப்டம்பர் மாதத்தில் ஒரு புனித தினம். இதற்குச் சரியான மகாராஷ்டிர மாதத்திற்கு "பத்ரபாத்" எனப் பெயர். அன்று மாலை வேளை. மாலை நேரங்களில் மலைகள் விளங்கும் காட்சியை வர்ணிக்கவும் வேண்டுமோ? மீண்டும் மறுதினம் ஜோதி பரப்ப வருவதாகக் கூறி சூரியனும் விடைபெற்றுக்கொண்டு மறையும் சமயம். செவ்வானத்தின் ஒளி எங்ஙணும் பரவி நின்றது. சற்று நேரத்திற்கெல்லாம் உலகத்தை இருள் பற்றியது. மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பகுதி. நாலா பக்கங்களிலும் அடர்ந்த காடுகள். மேலும் இருளும் கவ்விக்கொண்டதால் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்க முடியாமலிருந்தது. அவ்வளவு பேரிருள். மேலே விண்ணில் நக்ஷத்திரங்களும், கீழே காரிருளும் தான் ஒருவர் கண்ணுக்குப் புலப்படும். அங்குமிங்கும் வண்டிகளும், ஆந்தைகளும் சத்தமிட்டதைத் தவிர வேறெவ்வித ஓசையும் இல்லை.

கோயிலின் திருவிளக்கு

கீழ்ப் பள்ளத்தாக்கில் இருள் இன்னும் அதிகமாயிருந்தது. சுமார் முன்னூறு அடி உயரத்திலிருந்து ஒரு சிற்றருவி மலையின் ஒரு கணவாயில் செவியும் செவிடு படும்படியான பெருங் கோஷத்துடன் விழுந்து கொண்டிருந்தது. மற்றோரிடத்தில் ஒரு பெருஞ் சரிவு. அந்த இடத்தில் மின் மினிப் பூச்சி போன்ற ஒரு வெளிச்சம் தென்பட்டது. தூரத்தி லிருப்பவர்க்கு வெளிச்சம் கண்ணில் படுமேயொழிய, அது எந்த இடத்திலிருந்து வருகின்றதென்பதை அவர் கண்டறிய முடியாது. ஏனெனில் இடையில் அடர்ந்த விருக்ஷங்களிருந்தன. ஆனால் இந்த வெளிச்சம் ஒரு கோயிலின் திருவிளக்கேயல்லாது வேறெதுவுமில்லை. கோயிலின் முன் புறத்தில் திறந்த வெளியொன்றிருந்தது. இதனைக் கடந்து தான் கோயிலின் மண்டபத்திற்குச் செல்ல வேண்டும். மண்டபத்தைத் தாங்கி நின்ற பிரம்மாண்டமான கருங்கல் தூண்கள் ஒரே 'சில்' லென்று குளிர்ந்திருந்தன. இம் மண்டபத்துக்குப் பின்னர் தான் பவானி தேவியின் ஸன்னிதி யிருந்தது.

தேவியின் ஸ்வரூபம்

தேவி பவானி மூர்க்க ஸ்வரூபத்தில் தரிசனந் தந்துகொண்டிருந்தாள். அவளது கண்களில் தீப்பொறி பறந்தது. அவள் தலையி லணிந்திருந்த கிரீடம் ஜெகஜ் ஜோதியாய்த் திகழ்ந்தது. அதில் வைரமும், மாணிக்கக் கற்களும் வைத்திழைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு புறத்திலும் நான்கு கைகளாக மொத்தம் எட்டு கைகளிருந்தன. இடது பக்கத்தின் ஒரு கரத்தில் நீண்ட சூலாயுதம்; மற்றொரு கரத்தில் அரிவாள்; மூன்றாவது கரத்திலொரு வில்; நான்காவதில் கேடயம்; இக்கேடயம் பவானியினருகி லமர்ந்திருந்த சிங்கத்தின் பிடரிமீது தாங்கிக்கொண்டிருந்தது. வலது பக்கத்தின் ஒரு கையில் சங்கு; இன்னொரு கையில் அம்பு; மூன்றாவது கை தன்னை அண்டினவர்களை ஆசீர்வதிக்கும் முறையில், சற்று உயர்ந்து, உள்ளங்கை பூமியை நோக்கிய வண்ணமிருந்தது, நான்காவது கையில், ஒரு பெரிய, அகன்ற வாளிருந்தது. இதுவே பவானிதேவியின் ஸ்வரூபம்.

தரிசனமும், வாளும்

அன்றிரவு கோயிலுக்குள் சில வாலிபர்கள் ஒன்று கூடியிருந்தனர். மண்டபத்தில் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இவ்வீரர்களின் கண்கள் பவானிதேவிக் கருகில் வீற்றிருந்த

ஒரு உருவத்தையே நோக்கியவண்ணமாயிருந்தன. கற்பூரம், சாம்பிராணி முதலிய தூபங்களின் மணம் எங்கும் கமழ்ந்தது. இந்தக் காட்சி கண்களுக்குகந்ததாக விளங்கியது. பவானியின் பாதங்களருகில் வீற்றிருந்த அந்த உருவம் எது? அதுதான் நமது வீரர் சிவாஜி. அவரது கண்கள் பவானியின் மீது பதிந்து கிடந்தன. கையசையவில்லை; காலாடவில்லை; இமைகளும் கொட்டவில்லை; கல் சிலை போன்று அப்படியே வீற்றிருந்தார் சிவாஜி; பவானியின்மீது பரவசமடைந்து, பக்தியில் ஆழ்ந்திருந்தார். சிறிது சிறிதாக தேவியும் தன் அருட்கண்ணைத் திறந்து, பக்தன் சிவாஜியை நோக்கி, ஆசீர்வதித்தனள். சிவாஜி; பவானிக்குத் தமது ஹிருதயத்திலே இடம் தந்து, அவளது வீர சக்தியைப் பெற்றார். மகராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த சிவாஜி மன்னரின் முகத்தில் உடனே ஒரு புன்னகை தவழ்ந்தது. தன்னிரு கரங்களையும் நீட்டி, தேவி பவானி யளித்த அந்தப் பெரிய அகன்ற வாளைப் பெற்றார்; வணக்கத்துடன் அதைத் தமது முகத்துக்கெதிரே உயர்த்தி, ஒரு வீர முத்தங் கொடுத்தார்; மும்முறை வலம் வந்து அன்னை பவானியை வணங்கினார்.

வீர சபதம்

வீர வாள் சகிதம் சிவாஜி அவ்வாலிபர்கள் முன் வந்து நின்று, "எனது இஷ்ட தெய்வத்தின் கட்டளை கிடைத்துவிட்டது. என்ன நேரிடினும், எக்காரியத்தில் நான் இறங்கினும் நீங்கள் என்னைப் பின்பற்றத் தயாராயிருக்கிறீர்களா? எவரால் இது முடியாதோ அவர் தயவு செய்து இக்கோயிலுக்கு வெளியே சென்றுவிடலாம். பின்னர் எவரேனும் துரோக மிழைப்பராயின் அவர், அன்னை பவானியின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாக வேண்டி யிருக்கும் என்பதையும் அறியவேண்டும். தங்கள் விடையாது?" என்று கேட்டார்.

இன்ன சொல்வதெனத் தெரியாமல் வீர வாலிபர்களனைவரும் அப்படியே ஸ்தம்பித்து நின்றனர். ஆனால் அவர்களது கண்களில் மட்டும் வீர ஒளி பிரகாசித்தது; தாங்கள் என்றென்றும் சிவாஜியின் உண்மைப் போர் வீரர்களாக விருக்கச் சம்மதிப்பதை அவர்களது தைரியங்கொண்ட முகவிலாசம் உணர்த்திற்று. இது கண்டு சிவாஜி உள்ளம் பூரித்தவராய், மீண்டும் "உங்களை நான் நம்பலாமா?" என்று கேட்டார்.

வீரர்கள் "ஆம்" என்ற முறையில் தலையை அசைத்தனர்.

"உங்களுக்கு என்னிடத்தில் நம்பிக்கை யிருக்கின்றதா?"

வீரர்கள் தலை வணங்கினர்.

"உங்களுக்குப் பவானிதேவியின் பால் நம்பிக்கை யிருக்கின்றதா?"

வீரர்கள் முழந்தாளிட்டு, வணக்கஞ் செய்தனர்.

"சரி, எனது அருமை வீரர்களே! உங்களது வீர, தீரங்கண்டு மனமுவந்தேன். பவானி அன்னையின் வீரவாள் இதோ இருக்கின்றது. அதைத் தொட்டு, வணக்கஞ் செய்யுங்கள். ஆண்டவன் கிருபையால், நமது முயற்சிகள் வெற்றியில் முடியும்" என்றார் சிவாஜி.

அன்னையின் ஆசி

உடனே அவர் முதன் முதலாக அவ்வீரவாளுக்கு வணக்கஞ் செய்ய, வீரர்கள் யாவரும் ஒருவர் பின்னொருவராக அதன்முன் நின்று வணக்கமிட்டனர். அன்னையின் அருள் அத்தனை பேருக்கும் கிடைத்தது.

[இந்த வீரவாள் இப்போழுது லண்டன் நகரிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காக்ஷிச் சாலையி லிருக்கின்றது. சமீபத்தில் இந்தியாவில் பல விடங்களில் 'சிவாஜி ஜயந்தி' கொண்டாடப்பட்டது அந்த உத்ஸவத்தில் எங்கேனும் ஓரிடத்தில் பவானி தேவியின் வாள் இருந்திருந்தால் எவ்வளவு மேன்மையா யிருந்திருக்கும்!]

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

"அந்நிய இன்ஷ்யூரேன்ஸ்"

ஆசாரிய பிரபுல்ல சந்திர ரே அவர்கள் லாகூரில் நடந்த இன்ஷ்யூரென்ஸ் மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசிய போது அடியிற்கண்ட கருத்துக்களைக் கூறி யிருக்கின்றார்.

"சமீபத்தில்தான் இந்தியக் கம்பெனிகள் தோன்றி கொஞ்சம் மும்முரமாகத் தொழில் செய்து வருகின்றன. ஆனால் அநேக வருட காலமாக இன்ஷ்யூரென்ஸ் தொழில் அந்நிய தேசக் கம்பெனிகளின் கைகளிலேயே இருந்து வந்திருக்கின்றது. 1931-ம் வருஷத்தில்கூட புதிதாக 9 கோடி ரூ. இன்ஷ்யூரென்ஸ் அந்நியக் கம்பெனிகள் சேர்த்திருக்கின்றன. வருஷா வருஷம் பிரீமியம் தொகை சுமார் 4 கோடி போய்க் கொண்டிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து அந்தந்த அந்நியக் கம்பெனிக்கு எவ்வளவெவ்வளவு பணம் போகிறதென்பதை அறிவதற்கு கணக்குக் காட்ட மாட்டோமென்கிறார்கள். அந்நியக் கம்பெனிகள் இந்தக் கணக்கைக் காட்டவேண்டுமென துரைத்தனத்தார் வற்புறுத்த வேண்டும்.

* * *

"இன்ஷ்யூரென்ஸ் சம்பந்தமாக இந்தியாவிலுள்ள சட்டம் அந்நியக் கம்பெனிகளைத் தடுக்கக் கூடியதாக இல்லை. இந்தியக் கம்பெனிகளை அடியோடு கொன்றுபோட அந்நியக் கம்பெனிகள் முனைந்தால் அவைகளைத் தாக்குவதற்குக் கூட சட்டத்தில் வழியில்லை. இன்ஷ்யூரென்ஸ் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கு உடனே துரைத்தனம் ஏற்பாடு செய்தால்தான் நல்லது."

மெடலுக்கு வீங்கின மாக்டனால்டு

(திப்பு எழுதியது)

சென்னை மூர்மார்க்கட்டில் அணாவுக்கு இரண்டு வீதம் மெடல்கள் விற்கப்படுகின்றன. அழகான மெடல்கள் எல்லாம் யுத்தவீரச் சின்னங்கள்! அவைகளை யெல்லாம் விலைகொடுத்து வாங்கி சீமைக்கு அனுப்பலாமாவென உத்தேசித்திருக்கிறேன். ஏனெனில் இப்போது சீமையில் ஒரு பெரிய ஆள் மெடல் வேட்டையில் இறங்கி யிருக்கின்றார். ஒரு மெடல் அனுப்புவதாக யாராவது சொன்னால் ஒரு கடிதம் எழுதுகின்றார். காந்திஜி கையெழுத்து வேணுமானால் 10 ரூபா கொடுக்க வேண்டுமென்கிறாரே அந்தக் கஷ்டங்கள் சீமை மகானிடம் கிடையாது.

இந்தியாவில் பஞ்சாபில் யாரோ தேல்ராம் கங்காராம் என்று ஒருவர். நமக்குப் பெயர் மறந்துபோன ஒரு அநாமதேய சங்கத்துக்குக் காரியதரிசியாம். அவர் ஓர் தங்க மெடலைப் பண்ணி வைத்துக் கொண்டிருக்கிறாராம். யாருக்கு அனுப்புவதென்று யோசித்து மெடலுக்கேற்ற ஆளென பிரிட்டிஷ் பிரதம மந்திரியை தீர்மானித்தாராம். இந்தத் தீர்மானத்தைக் கேட்ட திரு. மாக்டனால்டு உடனே ஒரு அழகான கடிதத்தை தேல்ராம் கங்காராம அவர்களுக்கு எழுதியிருக்கிறார். கடிதத்தை எட்டு தரம் படித்தாலும் ஷோக்காயிருக்கிறது.

“தங்களுடைய நண்பர்களும் தாங்களும் சேர்ந்து ஒரு மெடல் அனுப்புவதாகச் சொல்லியிருப்பது எனது பரம பாக்கியம். கிருதார்த்தனானேன். இந்தியாவுக்கு நான் செய்துள்ள பரம சேவையைப் பாராட்டி அதை அனுப்புவதாக நீங்கள் சொல்லும்போது எனக்கு அந்தச் சேவையின் இன்பமே போதிய பரிசாய் நினைத்தேன் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்தியாவிடத்தில் அன்பு கொள்ளக் கற்றுக்கொண்டு விட்டேன். இந்தியாவை ஒரு தடவை தரிசித்திருக்கின்றேன். அது போதாதா? நீங்கள் தரும் கவுரவத்துக்கு அறிகுறியாக அனுப்பும் மெடல் எனது புத்திர பௌத்திராதிகளுக்குப் பெருமை தரும். இந்திய நட்பைத் தூண்டும். நீங்கள் அந்த மெடலைத் தபாலில் அனுப்பினாலும் சரி, நேரில் கொணர்ந்து கொடுத்தாலும் சரி. உங்களிஷ்டம்!

இப்படிக்கு,
ராம்சே மாக்டனால்டு.”

அடடா! என்ன உருக்கம்! என்ன அன்பு! இவ்வளவு இந்தியாவிடம் அன்பு கொண்டுள்ள பெரியாருக்கு மெடலை மட்டுமா அனுப்புவது? கொழுத்த சம்பளத்தையுடைய இந்திய வைஸ்ராய் உத்தியோகத்தையே அல்லவோ அவருக்குத் தரவேண்டும். இந்த மெடல் பரிசு அளிக்கின்றாரே—அவர் பேரென்ன?—தேல்ராம் கங்காராம்—அவருக்கு வைஸ்ராய் பதவியளிக்கும் அதிகாரம் இருந்தால் உடனே மாக்டனால்டு வீட்டு வாசலுக்குப் போய் உடுக்கடித்திருப்பாரே,

ஐயோ பாவம் அவரிடம் இந்த அதிகாரம் இல்லையே என் செய்வது?

மாக்டனால்டுக்குக் கட்டாயம் இந்த வயதிலாவது மெடல் கிடைப்பது பற்றி யாரும் அசூயைப் படக்கூடாது. பள்ளிக்கூடப் பையனா யிருந்தபோது அவருக்கு ஏதாவது மெடல் பரிசு கிடைத்ததோ இல்லையோ யாருக்குத் தெரியும்? பிறகு மகா யுத்த காலத்தில் அவர் யுத்த இயக்கத்தை எதிர்த்தவராதலால் யுத்தப் பதக்கம் கூட ஒன்றும் கிடைக்கவில்லை. பிறகு தொழிற்கட்சியின் தலைவரானாரே அப்போதாவது யாராவது ஒரு மெடல் பண்ணிப் போட்டிருக்கலாகாதா? மாக்டனால்டுக்குப் பாடவும் தெரியாதாம். கோதாவில் குஸ்தி போடவும் அறியாராம். அரேரே! சமையல்கூட அவர் செய்ததில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டாவது ஒரே ஒரு மெடலை—ஒண்ணே ஒண்ணு—யாராவது அவருக்கு அளித்திருக்கலாகாதா?

ஏறிய பின்பு ஏணியை உதைக்கும் சித்தாந்தம் போல தமது தொழிற்கட்சியை உடைத்தெறிந்தாரே அப்போதாவது ஒரு மெடல் கிடைத்திருக்கலாகாதா? ஆயுதப் பரிகரண மகாநாடும் உலகப் பொருளாதார மகாநாடும் வீணாய்ப்போகுமாறு செய்தாரே அப்போதாவது மெடல் கிடைத்திருக்க லாகாதா? மகான் தொட்டதெல்லாம் விடியாது. ஆகவே மெடல்களும் கிடைக்கவில்லை.

கடைசிக் காலாந்திரத்தில் அவருக்கு இந்தியாவினின்று மெடல் பிரயாணம் செய்யப் போகிறது. மாக்டனால்டுக்கு இந்தியாவிடம் ஏதோ பக்தி பத்தி யெரிகிறதாமே அதற்காக அந்தப் பதக்கமாம்! இந்தியாவுக்கு ஒரு தடவை விஜயம் செய்ததும் பிறகு இந்தியாவைப் பற்றி ஓர் புத்தகம் எழுதி வெளியிட்டாரே அதற்காக இந்தப் பதக்கமா? அல்லது அடக்குமுறைச் சட்டங்கள் இந்தியாவில் கொடிய நர்த்தனமாடும்படி செய்தாரே அதற்காக அந்த மெடலா? காந்தியடிகளோடு லட்சக் கணக்கான தேச பக்தர்களைச் சிறையில் மாட்டினாரே அதற்காக மெடலா! மூன்றுதரம் வட்டமேஜை கூட்டினாரே அதற்காக மெடலா? கூட்டுப் பார்லிமெண்டுக் கமிட்டி கூட்டியதற்காக மெடலா? இன்றைக்கு எடுப்பார் கைப்பிள்ளையாக கன்ஸெர்வேடிவ் சூழ்ச்சிக்காரர்கள் போட்ட கட்டிலில் புரண்டு கொண்டிருக்கிறாரே அதற்காக மெடலா? எதற்காக மெடல்? எதற்குத்தான் மெடல்?

சே! ஏதோ தமாஷாக எழுதப் புகுந்த கட்டுரை இவ்வளவு காரமாய் போய்விட்டதற்கு வாசகர்கள் மன்னிக்கவும். எனக்கு ஒன்றுமட்டுந் தோன்றுகிறது. இந்த மெடல் சீமைக்கு அனுப்பப்பட்டதும் இதை அனுப்பி உதவிய அந்த—யார்—பெயர் மறந்து போய்விட்டதே—தேல்ராம் கங்காராம்—அந்தப் பிரபுவின் விலாசத்தைக் கண்டுபிடித்து அவருக்கு ஒரு மெடல்—தகரமெடலாவது—இந்தியப் பொது ஜனங்கள் அளிக்க வேண்டுமென்பது எனது அவா.

புதிய லட்சியம் வேண்டும்!

கல்வித் துறையில் சீர்திருத்தம்

உலகில் படிப்பு அதிகமாய்த் தானிருக்கிறது. ஆனால் பயன் மட்டும் வளருவதாகக் காணோம். அதற்குக் காரணம் இதுவரை இருந்த கல்வியின் இலட்சியம் நவீன உலகுக்குப் பொருந்துவதில்லையென எஸ். ஜி. வர்த்தி என்பவர் பிரீ பிரஸ் ஜர்னலில் எழுதுகின்றார். 'சேவை' என்ற புதிய லட்சியத்தோடு கல்வி போதிக்கப்பட வேண்டுமென்கிறார்.

கல்விப் போதிப்பதிலேயே இனி ஒரு புதிய முறை ஏற்படவேண்டும். பழைய லட்சியங்களைக் குறை கூறுவதாக எண்ணவேண்டாம். பழையனவற்றில் சிறந்தவைகளைப் பொருக்கியெடுத்துக்கொண்டு புது உலகுக்கேற்ற முறையில் புதிய லட்சியத்திற் சேர்ப்பக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்பதே எனது கருத்து.

ஒரு மனிதனின் சாமர்த்தியங்கள் அதிகப்படவேண்டு மென்பதை லட்சியமாகக்கொண்டு கல்வி போதித்து வந்த முறை இனி உதவாது என்று தோன்றுகிறது அதனால் ஸமூகத்துக்கு ஏதும் உதவியில்லை. நல்ல பிரஜையாக ஒரு மனிதனைத் தயார்செய்வதே கல்வியின் நோக்கம் என நினைத்துக்கொண்டிருந்ததும் உபயோக மில்லாது போய்விட்டது. அவ்வாறு நல்ல பிரஜைகளை சிருட்டிப்பதால் ராஜீயப் பெருமைகள் ஏற்படலாமாயினும் பொதுவாக மனித உலகுக்கு சிரமந்தான் விளைவிப்பதாகிறது. ஆகவே இனி ஸமூகத்துக்கு உபயோகப் படத்தக்கதான ஓர் லட்சியத்தோடேயே சிறுவர்களுக்குப் பயிற்சி தரவேண்டும். மனிதர் யாரும் ஒரே குடும்பமென எண்ணம் ஏற்படுமாறும், ஜாதி, குலம், முதலிய பிரிவினை எண்ணங்கள் உண்டாகாதவாறும் ஓர்வகைக் கல்வியை புகட்டவேண்டும். இந்த லட்சியமுடைய கல்வியைத்தான் 'சேவைக் கல்வி' என்று நான் கூறுகின்றேன்.

இந்தக் கல்வியில் பயிற்சி தரும்போது மாணவர்களின் அறிவு விருத்தியையும், அந்த அறிவைக்கொண்டு அவர்கள் அக்கம் பக்கத்தி லிருப்பவருக்குத் தொண்டு செய்வதில் பிரியத்தையும் கவனிக்கவேண்டும். ஜாதி, குலப்பிரிவினைகள் மாணவர் மனதில் ஏற்படவே கூடாது. 'போட்டாப் போட்டி' எண்ணம் மிகுந்துள்ள உலகத்தில் பிறரை மேய்ந்து ஒருவன் சந்தோஷமாக வாழ்வதே கெட்டிக்காரத்தனம் என்ற அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனால் இனி வரப்போகின்றது ஒற்றுமை யுலகம். அந்த உலகத்தில் எவனொருவன் பிறர் நலத்துக்காக உழைக்கின்றானோ அவன்தான் வாழ்க்கையில் சிறந்தவன் என்ற அபிப்பிராயம் ஏற்படப் போகிறது. அந்த உலகுக்கேற்ற மனிதர்களை இப்பொழுதிருந்தே தயார் செய்ய வேண்டாமா?

இந்தப் புதிய முறையை ஏற்றுக்கொள்பவர்கள் அதற்கேற்ற பாடங்களைப் பொறுக்கிப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். மனித அன்பு காரணமாகச் சேவை செய்த பெரியார்களின் சரித்திரங்களை உபாத்தியாயர்கள் அவ்வப்போது சொல்லலாம். அதோடு மாணவர்களும் நேருக்கு நேரே சில ஸமூகப் பணிகளைச் செய்து பழகுமாறு திட்டம் போடலாம்.

உதாரணமாக ஒரு சிறுவன் தன் அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று அங்குள்ள சுகாதார நிலைமை, வியாதியின் அட்டகாசம், பட்டினியால் வருந்துபவர் தொகை முதலியவைகளை அறிந்து வருமாறு உபாத்தியாயர் அனுப்பலாம். குறைகளை எவ்வாறு தீர்ப்பதென்ற விஷயத்தில் உபாத்தியாயரே நேரில் உடன் சென்று செய்து காண்பித்து பிள்ளைகளையும் பழக்கவேண்டும்.

இதையெல்லாம் சொல்லும்போது "ஞானியைத் தயார் செய்வதே கல்வியின் பயன் என்று நினைத்திருக்கின்றீரா?" என்று என்னை யாராவது கேட்கலாம். "ஏன்? அவ்வாறிருந்தால் என்ன?' வென்று நான் கேட்கின்றேன். பெரிய லட்சியத்தை அடைவதே கல்வியின் பயன் என்பது உண்மையாகில் ஏன் அது நம்மை ஞானிகளாகவும் ஆக்கக்கூடாது என்று நான் கேட்கின்றேன். எவ்வளவோ மனக்கோட்டைகள், உண்மையாக முடிக்கப் பெறுவதை நாம் உலகில் கண்டு கொண்டிருக்கிறோம். நமது லட்சியத்தை நோக்கி நாம் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தாலும் பரவாயில்லை ஒரே தினத்தில் வீடு கட்டி முடிவதில்லை. ஒவ்வொருவனையும் ஞானியாக்கிவிட முடியும் என்றும் சொல்ல வரவில்லை. உலகத்தில் இப்போது தலைவிரித்தாடும் 'சுயநலம்' என்ற பேயைக் கூடியமட்டும் ஒடுக்கிவிட்டோமானால் அதுவே நமக்கு வெற்றி. லட்சியம் பெரியதாயிருப்பது கண்டு யாரும் கேலி செய்யவேண்டாம். தளராது பிரதிதினமும் உழைப்போமானால் நமது கனவு கட்டாயம் மெய்ப்படும்!

*　　*　　*

தற்காலத்தில் உலகில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதே அதற்குக் காரணமென்ன? பொருள்கள் கிடைக்காமல் பஞ்சமா? இல்லை. ஒரு வருஷத்தில் தயாரிக்கப்படவேண்டிய சாமான்களை மூன்றே மாதத்தில் செய்து குவித்து விடுகிறார்கள். ஆகவே உலகப் பொருளாதாரத்தில் ஒருவித முன்னேற்பாடும் செய்து கொள்ளாததால் நெருக்கடிகள் நேரிடுகின்றன. அதே மாதிரிதான் கல்வி விஷயத்தையும் எண்ணவேண்டும். அறிவு விர்த்தியாக்கப்படுகிறது; பிரஜா சுதந்திரம் புகட்டப்படுகிறது; ஆனால் உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 'சேவை' என்ற வெளிச்சத்தைக் கொண்டு இந்த இருளைப் போக்குவோமாக!

ஐயோ! சாணி தின்று உயிர் வாழவா?

(மகாத்மா காந்தி)

ஸ்ரீயுத முஜும்தார் அவரது கண்களாலேயே பார்த்த விஷயங்களை எனக்கு எழுதி யிருக்கிறார். ஸ்ரீயுத முஜும்தாரின் வார்த்தையில் சந்தேகப்படவே இடமில்லை. ஹிந்து சமூகத்தில் இந்தத் தீண்டாமை என்னென்ன செய்கிறதென்பதை மேல் ஜாதி ஹிந்துக்கள் இனியேனும் தெரிந்துகொள்வார்களாக! கடிதத்தில் சொல்லியிருக்கும் ஹரிஜனங்களின் கஷ்ட வாழ்வு நம் நாட்டில் மேல் ஜாதியாரிடையே எங்கு மிருப்பதாக நான் பார்த்தது மில்லை; கேட்டதுமில்லை.

ஸ்ரீயுத முஜும்தாரின் கடிதம் பின்வருமாறு:

"ஹரிஜனங்களுக்கு வேலை கிடைக்க மாட்டேனென்கிறது. பிற ஜாதியினருக்குக் கிடைக்கும் தொழில்கள் தீண்டாமை காரணமாக, ஹரிஜனங்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே இந்த ஹரிஜனங்கள் வேறு வழியின்றி சாணியைப் பொறுக்கி அந்தச் சாணியில் ஜீர்ணமாகாத சாமான்களைச் சேகரித்துப் புசித்து உயிர் வாழுகின்றனர். சமீபத்தில் நான் குஜராத் பிரதேசத்துக்குப் போனபோது இந்த அசங்கியக் காட்சியைப் பார்க்கும் பரிதாபம் ஏற்பட்டது. 'பங்கி' ஜாதியார் வசிக்கும் ஒவ்வொரு இடங்களிலும் மாட்டுச் சாணம் காய வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அந்த இடத்தில் வசிக்கும் ஹரிஜனங்களைக் கூப்பிட்டு விசாரித்ததில் அவர்களுக்குத் தொழிலே கிடைப்பதில்லை யென்றும் ஆகவே உயிர் வாழ்வதற்காகச் சாணியைப் பொறுக்கி அந்தச் சாணியில் கிடைக்கும் தானியங்களைக் கொண்டு ஜீவித்து வருவதாகவும் சொன்னார்கள். சாணியைக் காய வைப்பார்களாம்; பிறகு அதில் ஜீர்ணமாகாது இருக்கும் தானியங்களைப் பிரித்தெடுப்பார்களாம்; அரை அரையாய் கடிக்கப்பட்டு அந்தத் தானியங்கள் இருக்குமாம்; அதை, அலம்பிக் காய வைத்து, மாவாக்கி சப்பாத்தியாகப் பண்ணி சாப்பிடுவதாகச் சொன்னார்கள்!"

—ஹரிஜன்

கதரை அணியுங்கள்



தப்பான வழி

(மகாத்மா காந்தி)

நான் சொன்ன சொற்களென வர்ணித்து ஸநாதனிகள் என்னென்ன சொல்கின்றார்களென்றும், எனது வார்த்தைகளையே எவ்வாறு திரித்துக் கூறி பொதுஜனங்களுக்கு என் மீது ஆத்திர மேற்படுத்துவதற்கு முயல்கின்றார்களென்றும் நிரூபிக்க ஒரு நண்பர், ஸநாதனிகள் எழுதிய கட்டுரைகளைக் கத்தரித்து எனக்கு அனுப்பியிருக்கின்றார். இது எனக்குப் புதியதன்று. அவைகளில் அநேகவற்றிற்கு நான் அவ்வப்போது பதில் சொல்லி வந்திருக்கின்றேன். வேணுமென்றே என்மீது துரபிப்பிராயம் கொள்பவர்களுக்கு நான் என்ன சமாதானம் சொன்னாலும் ஏறப் போவதில்லை. நட்பு பாராட்டுபவர்கள் இத்தகைய வார்த்தைகளை லட்சியம் செய்யவும் மாட்டார்கள். மாறுபட மாட்டோமென்று பிடிவாத குணத்தோடு என்னை எதிர்ப்பவர்களுக்கும், என்ன சொன்னாலும் மாறாது என்னையே பின்பற்றி வருபவர்களுக்கு மிடையே ஓர் மத்தியக் கட்சி இருக்கிறது. அவர்கள் இப்படியும் மாறமாட்டார்கள்; அப்படியும் மாறமாட்டார்கள். அந்த மத்தியக் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பரே இந்தப் பத்திரிகைக் கத்தரிப்புக்களை அனுப்பி யிருக்கின்றார். ஆகவே அவரது கடிதத்துக்கு இந்தப் பத்திரிகையின் மூலம் பதில் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

[பின் வருவன நான் சொன்னவைகளென அந்தக் கத்தரிப்புகளில் சொல்லப் பட்டிருக்கிறது.]

1. "ஆதியிலிருந்து அந்தம் வரை மகாபாரதம் என்பது முழுக் குப்பை."

2. "ஸ்ரீ கிருஷ்ணனை ஒரு அவதாரம் என நான் நினைக்கவில்லை. அவனும் ஒரு மனிதனே."

3. "யோக்யமாக வாழ்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. விக்ரகங்களை உடைப்பதிலேயே எனக்கு நம்பிக்கை."

4. "ஹிந்து தர்மம் என்பது பிசாசாயிருக்கின்றது. சாஸ்திரங்களில் கடவுள் தன்மையையே காணோம். ரிஷிகளும், முனிவர்களும் பைசாசங்களாக இருக்கின்றனர்."

இப்படி நான் சொன்னதாக ஸநாதனிகள் எழுதியிருக்கின்றனர். யங் இந்தியாவி லிருந்தோ நவஜீவனிலிருந்தோ எடுக்கப் பட்டதாக அவை மேற்கோளாகக் காட்டப்படவில்லை. இடங்களைக் குறிப்பிடவுமில்லை. என்னிடம் இப்போது யங் இந்தியா, நவஜீவன் வால்யூம்கள் இல்லை. ஆயினும் ஞாபகத்தினின்று ஏதாவது சொல்ல முடியுமா வென்று பார்க்கிறேன்.

மகாபாரதத்தைப்பற்றி முன்னமேயும் இப்பவும் நான் நினைப்பது என்னவென்றால் அது ஒரு பெரிய வயிரச் சுரங்கம், ஆழமாகத் தோண்டத் தோண்ட இன்னும் வயிரக்கள் அகப்பட்டுக்கொண்டே யிருக்குமென்பது எனது அபிப்பிராயம்.

உலகில் தோன்றிய எவ்வளவோ அவதாரங்களில் பகவான் கிருஷ்ணனும் ஒரு அவதாரமென்றே நம்புகிறவன் நான்.

ஹிந்துக் கோயில்களை விபசார விடுதிகளென்று நான் சொன்னதேயில்லை. சில கோயில்கள் விபசார விடுதிகளைப் போல இருக்கின்றனவென்பதை இப்பவும் நான் சொல்கின்றேன். மனிதன் யோக்யதையில் எனக்கு நம்பிக்கையில்லை என்று ஒரு போதும் நான் சொல்லமாட்டான். எனக்கு மதமும் மனிதனின் யோக்ய வாழ்க்கையும் ஒன்றே யென்பதை எனது புத்தகங்களினின்று அறியலாம்.

நான் விக்ரக பூஜைக்காரன் என்பது உண்மையாயின், விக்ரகங்களை உடைப்பவனென்பதும் உண்மையாயிருக்கும். போலித் தெய்வங்களுக்கு நான் தலை வணங்க மாட்டேன்.

நாலாவதாகச் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளை என் வாயினால் சொல்லியிருப்பேனா? ஹிந்து தர்மம் என்பது பிசாசாக யிருப்பதாக நான் நினைப்பதானால் பல காலத்துக்கு முன்னமேயே அதற்கு நான் சீட்டுக் கொடுத்திருப்பேனன்றோ!

விஷயங்களை வெட்டிச் சொல்வதாலும் பொறுப்பற்ற முறையில் எழுதுவதாலும் சனாதன தர்மத்துக்கு என்ன லாபம்?

மோசக்காரன் கதி

பிரான்ஸில் ஸ்டாவெஸ்கி என்பவன் எப்படி அடகுக் கடைகளை வைத்து மோசடி செய்தானே அதே மாதிரி அமெரிக்காவில் மிஸ்டர் இன்ஸல் என்பவன் அநேக குடும்பங்களை மோசம் செய்து நாசமாக்கினவன். அக்ரமத்தைச் செய்துவிட்டு அவன் அமெரிக்காவை விட்டு ஓடி கிரீஸில் போய் தஞ்சமடைந்தான். சட்டத்தின் நீளக் கை கிரீஸ் வரை நீண்டது. இன்ஸலைப் பிடித்துத் தர முடியாதென கிரேக்க அரசாங்கம் மறுத்தது. பிடிவாதமாக அமெரிக்க சர்க்கார் கேட்கவே கிரீஸ் அரசாங்கம் இன்ஸலை நாடு கடத்திற்று. இன்ஸல் கப்பலேறி பெர்ஷியாவுக்குப் போய்த் தங்கலாமெனப் புறப்பட்டான்.

அவன் ஏறிச் சென்ற கிரேக்கக் கப்பல், துருக்கியைச் சேர்ந்த கான்ஸ்டாண்டி நோபில் துறைமுகத்தை அடைந்த போது அங்கிருந்த அமெரிக்க ஸ்தானீகர் அவனைக் கைது செய்து தரவேண்டுமென துருக்கி சர்க்காரைக் கேட்டார். அங்கோரா துரைத்தனம் இன்ஸலைக் கைது செய்து அமெரிக்காவிடம் ஒப்படைத்தது. அமெரிக்காவில் இனி இன்ஸல் மீது வழக்கு நடக்கும். அவன்மீது பரம ஆத்திரம் அமெரிக்காவிலிருக்கிறதாம்.

துருக்கி துறைமுகத்தில் நின்ற ஒரு கிரேக்கக் கப்பலினின்று ஒருவனை துருக்கித் துரைத்தனம் கைது செய்து தருவது சர்வதேச வழக்கங்களுக்குப் புறம்பானது. ஆனால் அமெரிக்காவிடம் நட்புக் காட்டுவதற்காக அங்கோரா துரைத்தனம் கொஞ்சம் மெய்மறதியாகவே நடந்து கொண்டது போலும்!

இந்த சமயத்தில் இன்னொன்று ஞாபகம் வருகிறது. இருபது வருடங்கட்கு முன்னே சாவர்க்கார் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு கொணரப்பட்டபோது அவர் பிரிட்டிஷ் ஸ்டீமரிலிருந்து பிரஞ்சுக் கடலில் குதித்து மார்ஸெயில்ஸை அடைந்தார். அவரைப் பிடித்துத் தர வேண்டுமென பிரஞ்சு துரைத்தனத்தைப் பிரிட்டிஷார் கேட்டனர். கைதி பிரஞ்சு மண்மீது இருந்ததால் பிரஞ்சு சர்க்கார் கைது செய்து தந்தனர். ஆனால் இன்ஸல் கதையிலோ அவன் கிரேக்கக் கப்பலைவிட்டு இறங்கக்கூடவில்லை. அப்படியிருக்க துருக்கி கைது செய்யலாமா?

இன்ஸல் பரம அயோக்கியனாகவேயிருக்கலாம். ஆனால் சட்டம் எப்படிச் சொல்கிறது என்பதை அரசாங்கங்கள் கவனிக்க வேண்டாமா?

—ஹிந்து அப்ஸர்வர்.

அஷ்டதிக்கு

—வழிப்போக்கன்.

எட்டுத் தடவைக்கு மேல் திக்கினால் நம்மால் கேட்கச் சகிக்காதையா!

* * *

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு.

—தலைப்பு.

கட்டுரைக்காரருக்கு........?

* * *

கண்ணில் படுகிற பெண் உருவங்களை அவன் அப்படியே விழுங்கித் தீர்த்துவிடுகிறான்.

—கட்டுரை.

அட கபந்தா! நரமாமிசத்தில் அவ்வளவு ஆசையா?

* * *

உங்களுக்கு ஆசையில்லையா?

—விளம்பரம்.

ஆசைக்கோ ளவில்லை. ஆசையிருந்தால் போதுமா—காசு வேண்டுமே.

* * *

சிரிப்பதும் அழுவதும் ஒன்றே என்று ஞானிகள் சொல்வார்கள்.

—கட்டுரை.

அப்படியானல் ஏறுவதும் இறங்குவதும் ஒன்றுதான். இமயமும் குமரியும் ஒன்றுதான். இறப்பும் பிறப்பும் ஒன்றுதான். துவந்தங்களை யெல்லாம் ஒன்றாக்கிவிடும் ஞானி பெரிய ஞானிதான்.

* * *

நமது பெருங்காயத்தைக் கேளுங்கள்.

—விளம்பரம்.

கேட்டால் பதில் சொல்லுமா?

"தம்பி! சில காலமாகத் தமிழ் மொழில் ஒரு புதிய நடை தோன்றி வளர்ந்து வருவதை நீ அறிந்திருக்கலாம். அதற்கு 'நேர் நடை' என்று பெயர்."

—கட்டுரை.

ஸ்வாமி! இந்தக் கட்டுரை நேர் நடையோ, நேரில்லாத நடையோ. தயது செய்து பதில்!

* * *

"சுதேச சமஸ்தானதிபதிகள் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பிள்ளைகளென்கிறார்கள். சமஸ்தானப் பிரஜைகள் சமஸ்தானதிபதிகளின் புத்திரர்களென்கிறார்கள். பிள்ளைகளை மட்டும் காக்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பேரப் பிள்ளைகளை மட்டும் கவனியாதிருப்பானேன்?"

—சட்டசபையில் ஸ்ரீயுத பூரி.

பேரப் பிள்ளைகளைக் கவனிக்கத் தடியும் பிரம்பும் வேண்டும் போலும்!

* * *

கல்கத்தாவில் நூதன மூளை நோய்.

—தலைப்பு.

பழைய மூளை நோய் பத்திரிகாலயங்களிலா?

* * *

"அஸ்ஸெம்பிளிக் கட்டிடத்தின் பக்கம் ஓர் பைத்தியக்காரன் வந்து அவன் இந்த சபைக்குள் நுழைந்து விட்டால் நாம் என்ன செய்வது?"

—சட்டசபைப் பிரசங்கத்தில் வி. எஸ். ரங்கய்யர்.

அவனையும் சபையில் பேசச் சொல்லலாமே.

* * *

மசோதாமீது ஷூஸ்டர்.

—ஓர் தலைப்பு.

மசோதாவின் கீழே குடியானவர்கள் பாரந் தாளமாட்டாது கதறுகின்றார்கள் என்பது மறைபொருள்.

* * *

ஜகந்நாத் அக்ரவால் என்ற அஸ்ஸெம்பிளி அங்கத்தினர் ஒரு மதருஸியிடமிருந்து தலைப்பாகை பொன்றை வாங்கித் தலையில் போட்டுக்கொண்டு சபையில் வந்து உட்கார்ந்தார்.

—சட்டசபைச் செய்தி.

அட அக்ரவாலே! அந்தத் தலைப்பா மாற்றிய மதருஸி யாரப்பா?

* * *

திருவள்ளுவர் நூல் நயம்.

—விளம்பரம்.

சர்க்கா போட்டியில் முதற் பரிசு கிடைத்ததா?

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

18712

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.